உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—௨௮.] சுக்கிலஹு மாசிமீ [பகுதி—௪.

Vol. XXVIII. *February-March 1930.* No. 4.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௯௬-ம் பக்கத்தொடர்ச்சி.]

### அயோமுகிப் படலம்.

அயோமுகி யென்னும் அரக்கியைப்பற்றிக் கூறுவது.

#### இராம லக்குமணர் ஒரு மலையை அடைதல்.

[இராம லக்குமணர், மாலை நேரம் வந்தபோது, சடாயு தகனமான இடத்தைவிட்டுச் சென்று ஒரு மலையை அடைந்து தங்கினார்கள். இரவு தொடங்க, இருள், இராக்கதர்கூட்டம்போலப் பரவலுற்றது. மலையின் கண்ணீரருவி யொழுகுதல், அது அவர்கள் துன்பங்கண்டு கண்ணீர் அருவி பொழிதல் போன்றது].

#### இராமன் இரவு முழுதும் துயிலாமை.

430 யாம் அது தெரிதல் தேற்றும், இன்னகைச் சனகி யென்னும்
காமரு திருவை நீத்தோ, முகமதி காண்கி லாதோ,
தேமரு தெரியல் வீரன் கண்ணெனத் தெரிந்த செய்ய
தாமரை கங்குற் போதும் குவியலாத் தன்மை என்னோ!

இ - ள், இராமனுடைய கண் என(ப் பெயர்பெற்று) விளங்கிய செந்தாமரை மலர் (இதுவரை சென்ற இரவுகளில் தவறாது குவிந்தது போல, இந்த இரவில்) குவியாமை (க்குக்காரணம்) சீதையெனப்பட்ட

இலக்குமியைப் பிரிந்த (காரணத்) தாலோ அவள் முகமாகிய சந்திரனைக் காணாத (காரணத்) தாலோ, (இவ் இரு காரணங்களுள் எக்காரணத் தாலோ,) அ (க் காரணத்) தை அறிதலில் யாம் தெளிவில்லேம்.

'தெளிவித்தல்' 'தெளிதல்' என்னும் இரு பொருள் உள்ளதாய்ப் பிறவினை தன்வினைக்குப் பொதுவாகிய தேற்றுதல் இங்கே தன்வினையாகிய தெளிதலை உணர்த்திநின்றது. இன் நகை சனகி - இனிய (புன்) சிரிப்பையுடைய சீதை. காமர் - அழகு உசாரிபை. திரு - இலக்குமி, உருவகமாய்ச் சீதையை உணர்த்தியது. நீத்தல் - நீங்குதல். தேம் மரு தெரியல் - தேன் மருவிய (-பொருந்திய) பூமாலை. 'மருவு' என வழங்குவது உகரம் ஒழிக்கப்பட்டு 'மரு' எனப்பட்டது. தெரிந்த - விளங்கிய. 'வீரன் - எண்ணரும் பொருள்களெல்லாம் என்பது தெரிந்த தன்றே' (சடாயு உயிர்நீத்த படலம் 202) என்பதிலும் 'தெரிதல்' விளங்குதல் என்ற பொருளில் வருதல் காண்க. 'தேமதுத்தெரியல்' 'குவிந்தில' என்பனவும் பாடங்கள்.

"இது கவிக்கூற்று. திருவை [செல்வத்தை] இழந்தவன் கண் மூடி உறங்காமைபோல, திருவை [சீதையை] இழந்த இராமனும் அவ் விரவிற் கண்மூடித் தூங்கவில்லை. ........... 'கண்ணெனத் தெரிந்த செய்ய தாமரை' என்ற உருவகத்தில் 'எனத்தெரிந்த' என்ற சொல்லாற்றலால், கண் எனவே கொண்டு அது மூடாததற்கு 'திருவைநீத்தோ' என்றும், தாமரையென்ற உருவகத்திற்கு ஏற்ப அது குவியாததற்கு 'மதி காண்கிலாதோ' என்றும் காரணங்கூறினரென்க. .........ஒரு மனைக்கு உரியளாய் அதனுள் தனியே வாழ்ந்திருந்தவள் திடீரென்று அம் மனையைவிட்டு அகன்றால், அம் மனை இரவிலும் கதவடைக்கப்படாமல் திறந்தபடியே வாளாகிடத்தல், இயல்பு; அத் தன்மையை இங்கே கொண்டு, செந்தாமரைமலர்க்கு உரியளாய் அதில் வாழும் திருமகளாகிய சீதை நீங்கியதனால் அத் தாமரைமலர் இரவிலுங் குவியாது கிடந்ததோ என்று சங்கித்துக் கற்பனை கூறினரென்றல் நேர். இராமனது திருக்கண்ணுக்குத் திருமகள் வாழுஞ் செந்தாமரையை உவமையெடுத்துக் கூறியதனால், அப் பெருமான் பிராட்டியைத் தனது கண்ணினுள் வாழுங் கருமணி (யுட்பாவை) யாகக்கொண்டு மிகப் பாராட்டி வெகு அருமையாகப் போற்றிவந்தானென்பது விளங்கும்." 'கருமணியிற்

பாவாய்நீ போதாய் யாம் வீழும்—திருநுதற் கில்லை இடம்' என்ற குறள் இங்கே கருதத்தக்கது.

'கங்குல் எல்லைகாண்பளவும் நின்றான் இமைத்திலன் நயனம்,' (குகப்படலம் சஉ) எனவும் 'வரிவில் ஏந்திக் காலைவா யளவும் தம்பி இமைப்பிலன் காத்து நின்றான்' (கங்கைப்படலம் சஅ) எனவும் இராம சீதையரைக் காப்பதற்காக வனவாசகாலம் பதினாலுவருடமும் இரவிலும் மூடாதிருந்த இலக்குமணன்கண்களைச் சீதை பிரிவாற்றாமையால் மூடாதிருந்த இராமன்கண்கள் ஒத்தன.

[இராமன் சீதையைநினைந்து காதல்கூரும்படி அவள் முகம் தோன்றினாற்போலச் சந்திரோதயமானது. தனக்கேயன்றித் தன் மரபுக்கே வன்பழி வந்துசேர, மனையாளை மாற்றான் வெளவிய மானத்தால் புறத்தே தூரத்தப்பட்டும், அப்பழி நீங்க மாற்றானைக் கொன்று அவளைத் திரும்ப அடையவேண்டுமென்னும் ஆசையால் அகத்தே யிழுக்கப்பட்டும், அங்குமிங்கும் அலைப்புண்டு ஆருயிர், உடலுள் நிற்கமாட்டாமலும், உடலைவிட்டுப் போகமாட்டாமலும், வருந்தாநிற்க, இராமன், முன் சீதையைக் காக்காமலும் இப்போது அவளை மீட்காமலும் வீணேயிருக்கும் வில்லை ஏனோதரித்திருக்கிறேனென்று வில்லையும் தன்னையும் வெறுத்துக் கூறினான்.]

## இராமனுக்கு இரவு நீட்டித்தல்.

431 பிரிந்த ஏதுகொல்,- போபி மானங்கொல்,
தெரிந்த தில்லை: திருமலர்க் கண் இமை
பொருந்த ஆயிரம் கற்பங்கள் போக்குவான்,
இருந்து கண்டிலன், கங்குலின் ஈறரோ.

இ - ள். கண்ணிமைகள் பொருந்தக் கற்பங்கள் ஆயிரம் கழிப்பவன் (எனவே இமைப்பொழுது கற்பகாலம்போலத் தோன்ற இராப்பொழுதைப் போக்குவானான இராமன், படுக்கையிற் படுக்கமாட்டானாய் இருப்பிலேயே) இருந்து இரவின்முடிவைக் கண்டானில்லை. (அவனுக்கு அன்றை யிரவு அபாரமாக நீண்டதாயிருந்தது. அவ்வாறிருந்தது, சீதையைப்) பிரிந்த காரணத்தாலோ, (அவள்மீது கொண்ட) ஆசை மிகுதியாலோ, (எதனாலென்று எமக்குத்) தெரியாது.

ஏது - காரணம். 'பிரிந்த பேதங்கொல்' என்ற பாடத்துக்கு, (சீதையோடு கூடியிருந்த முந்திய இரவுகளோடு ஒற்றுமையின்றி இந்த இரவு அவளைப்) பிரிந்த (தனால் ஏற்பட்ட புதிய மாறுபாடான) வேற்றுமை (யுடையதாயிருந்தமை) யினாலோ எனப் பொருள்கொள்க. பேர் அபிமானம் - பெருவிருப்பு. அபிமானம் - விரும்புதல் (தமிழ்ச்சொல் லகாதி). கற்பம் - பிரமன்வாழ்நாள்களில் ஒருநாள் - நானூற்றுமுப்பத் திரண்டுகோடி வருடம் (தமிழகாதி). கங்குலின் ஈறு - இரவின்முடிவு. அரோ அசை.

'பேரபிமானங்கொல்' என்பதற்குப் பேர் [இரா (வுக்கு) மன் (-இராசா) என இருத்தலால், இராத்திரியை விழிப்பாயிருந்து காக்க வேண்டும் என்ற] அபிமானத்தாலோ என்பது தொனி அருத்தம்.

[இராமன், "இளையோய், நாம் நகர்நீங்கிய நாள்தொட்டு இந் நாள் மட்டும் சென்ற எல்லா இரவுகளிலும் இருப்பில் இருத்தலின்றி நிலையில் நின்று நித்திரை நீக்கி என்னைக் காக்கின்றாயன்றே; இன்றையிரவுபோல என்றையிரவும் இவ்வளவு நீட்டித்ததில்லையே; இன்றையிரவு இவ்வாறு நீளுதற்குக் காரணம் யாது? நம் குலமுதல்வனான சூரியன் இன்னும் தோன்றவில்லையே. இவ்வளவுபொழுது தோன்றாமல், அவன் இன்றுபோல என்றும் தாமதித்ததில்லையே. தன்குலத்தில் ஒரு பெண்ணைப் பகைவன் பற்றிக்கொண்ட பழிக்கு நாணிப் பலர்காணத் தோன்றப்படாதென்று நாடுகடந்துபோய்விட்டானோ? அல்லது இராவணனாற் சிறைவைக்கப்பட்டுத்தான்விட்டானோ?" என்று பகர்ந்து வருந்தினன். அப்போது விடிந்தது.

## விடியல் வருணனை.

விடியவே, மிருகங்களும் பறவைகளும் தத்தம் *சேக்கைகளைவிட்டு நீங்கி வெளியே புறப்பட்டன. பெண்மயிலும் ஆண்மயிலும் பிணைந்தும் மானும் கலையும் மருவியும் †களிறும் ‡பிடியும் கலந்தும் களித்துத் திரியக்கண்டு, சீதையின் பிரிவாற்றாமைத்துயர் மிகுதியாக, இராமன் வருந்தினன். சூரியன் உதயமானன்.

---

*சேக்கை - மிருகங்கள் பறவைகளின் படுக்கை. †களிறு - ஆண்யானை. ‡பிடி - பெண்யானை.

## சூரியோதய வருணனை.

சூரியன், "இராமா! 'தாமரை தவிரப்போந்தாள்'* ஆகிய திருமகளான சீதையைக் காண்கின்றிலையாதலால், அவள் திரும்பிச்சென்று தாமரையிற் குடிபுகுந்திருக்கின்றாள்போலும்; எல்லாத்தாமரைகளும் மூடப்பட்டிருத்தலால், அவள் எந்தத்தாமரையி லிருக்கின்றாளென்று காணமுடியவில்லையே; என் றெண்ணவேண்டா. இதோ! எல்லாத் தாமரைகளையுந் திறந்து காட்டுகிறேன். அவள் அவைகள் ஒன்றிலுமில்லை, பார்த்துக்கொள்" என்று, தான் முதனாள் அத்தமிக்கும்போது மூடியதாமரைகளையெல்லாம் தன் †கரங்களால் திறந்துகாட்டினாற்போலத் தாமரைமலர்கள் மலர, உதயமானான்.

## இலக்குமணன் அயோமுகியை அங்கபங்கஞ் செய்தல்.

உதயமானவுடன், இராமலக்குமணர் திரும்பவும் சீதையைத் தேடுவாராய்ப், பல காடுகளும் ஆறுகளும் கடந்துசென்றார்கள். அன்று அத்தமனமாகுமளவும் தேடியுங் கண்டிலர். இரவுவர, எங்கும் இருள் மூடலுற்றபோது, ஒரு பளிங்குப் பாறையைக் கண்டு அங்கே தங்கினார்கள். அப்போது, இராமன், "தண்ணீர் கொண்டுவா" எனத் தம்பி தனியனாய்ச் சென்று தண்ணீர் தேடித் திரியும்போது, அவனை அயோமுகி என்னும் அரக்கி கண்டு, ஆசைப்பட்டு, 'என்னைத் தழுவும்படி இவனை இரப்பேன், இணங்கானேல், எடுத்துக்கொண்டுபோய், என் குகைக்குள் வைத்து வலியத்தழுவுவேன்' என்று எண்ணிக்கொண்டு வந்து அவனெதிரே நின்றாள். அவன் "ஆரடீ! சொல்" என, "யான் கல்யாணமாகாத கன்னிகை. என்னைக் கலந்து என் உயிரைக் காப்பாயாக" என, வெறுத்து விழிசிவந்து "இனி இவ்வாறு கூறிடுவாயேல், உன் உடலைக் கூறிடுவேன்.‡" என்றான். அவள் மோகமிகுதியால் கோபமுறாமல், "உன்னால் உயிர்கொள்ளப்பெற்று இறந்தேனேல், பிறந்தேன்§" என்றாள். அவன், "இனி நிற்பாயேல் காதையும் மூக்கையும் களைந்திடுவேன், ஓடிப்போ" என்றான். அவள், அவனை மாயையால் மயக்கி, மகவை¶ யெடுத்தல்போல வாரியெடுத்து மார்போடணைத்துத் தாங்கிக் கொண்டுபோனாள். கரிய இராட்சசியின் கைகளுக்கும் மார்புக்கும்

---

*மாரீசன்வதைப்படலம் சுஎ. †கரங்கள்-கைகள்; கிரணங்கள். ‡கூறிடுதல்-பிளந்திடுதல். §பிறந்தேன்-பிறந்ததனாலாயபயன் பெற்றேன். ¶மகவு-குழந்தை.

இடையே உடம்புமுழுதும் மறைந்த இலக்குமணன் யானைத்தோல் போர்த்த ஈசனை ஒத்தான்.

### இலக்குமணனைக் காணுமல் இராமன் வருந்தல்.

இராமன், நீர்கொணரச் சென்ற இலக்குமணன் நிரம்ப நேரமாகியும் திரும்பி வராமையால், வருந்தி 'இலக்குமணு! இன்னும் வந்தாயில்லையே! சீதையைக் கவர்ந்த இராவணன் உன்னையும் கவர்ந்தானே! யான் சானகியைப் பிரிந்து வருந்துதல் சகிக்கமாட்டாமல் தற்கொலைசெய்து கொண்டாயோ! என்கண்ணுயிருந்த உன்னை இழந்த யான் உன்னை எவ்வாறு தேடிக் காண்பேன்']

### இராமன் எல்லாருக்கும் ஏற்றமாக இலக்குமணனை நேசித்தல்.

432 'என்னைத்தரும் எந்தையை என்னையரைப்
பொன்னைப்பொரு கின்ற பொலங்குழையாள்
தன்னைப்பிரி வேன்உளென் ஆவது தான்
உன்னைப்பிரி யாத உயிர்ப்பலவோ!'

இ-ள். 'என்னை (ஈன்று) அளித்த என் தந்தை தாயரையும் இலக்குமியை நிகர்த்த சீதையையும் பிரிந்தேன் (ஆகியும் இறந்தேனாகாது உயிர்) உள்ளேனுயிருப்பது உன்னைப் பிரியமாட்டாத உயிரை அடைந்திருத்தல் அல்லவோ!'

'எந்தை', 'என்னை' என்பன முறையே 'என்தந்தை', 'என் அன்னை' என்பவற்றின் மரூஉ. பொன் - இலக்குமி. பொருதல் - போலல். பொலம் - அழகு; பொன். குழை - குண்டலம். உயிர்ப்பு - உயிரடைகை (தமிழ்ச்சொல்லகராதி).

"இராமன் இலக்குமணனைப் பிரியாதிருந்தது, மற்றையோரைப் பிரிந்த வருத்தத்தை மறைத்தது என்றபடி; இதனால், இராமன் மற்றையோரினும் இலக்குமணனிடத்து மிக்க அன்புகொண்டமை நன்கு விளங்கும்."

தந்தை தாயர் தாரத்தைப் பிரிதலோடு சகோதரான பாதசத்துருக்கரைப் பிரிந்தமையும் உபலக்கணத்தாற் கொள்க.

இராமன், இதன்முன்னர், சீதையைப்பிரிந்தபோது, 'மாண்டே னே அன்றோ, மறையோர் குறைமுடிப்பான்—பூண்டேன் விரதம்; அதனால் உயிர்பொறுப்பேன்'* என, மறையோர்குறைமுடிக்கும் விரதத்தை மறவாதிருந்தவன், பின்வருமாறு, இலக்குமணன் பிரிந்தவருத்தம் தாங்கமாட்டாமல் 'வடிவாள்கொடு மன்உயிரைத் துறப்பான்'† ஆகித் தற்கொலைசெய்யப் புக்கபோது மறந்துவிட்டமையாலும்; பின்னர், இந்திரசித்து எய்த பிரமாத்திரத்தால் இலக்குமணன் இறந்தானென்று இராமன் எண்ணியபோது, 'இளையவன் இறந்தபின் எவரும் என்? எனக்—களவறு சீர்த்தி என்? அறிவென்? ஆண்மை என்?—கிளையுறு சுற்றம் என்? அரசென்? கேண்மை என்?—விளைவுதான் என்? மறைவிதிஎன்? மெய்ம்மை என்?'‡ என்றமையாலும்; இராமன் மற்றெல்லார்பாலும் வைத்த அன்பினும் இலக்குமணன்பால்வைத்த அன்பு மிக்கதென்பது வலியுறுதல் காண்க.

## இராமன் தற்கொலைசெய்யப்புக்கபோது அயோமுகியின் அலறுதலைக் கேட்டல்.

['உன்னை இழந்தபின் உயிர்வாழேன்! நம் உறவினரனைவரும் இறந்திடுவார்! உன் கிளையான எங்களையெல்லாம் கொன்றாயானாய்!' என்று புலம்பி, இராமன், துன்பம் தாங்கமாட்டானாய் எழுவான், விழுவான், இருப்பான், ஓடுவான், தேடுவான், வாடுவானாகி 'இப்போது இறப்பேன், அடுத்த சென்மத்தில் உனக்கு அண்ணனாகப்பிறப்பேன்' என்று தற்கொலைசெய்யத்தொடங்கிய தற்சமயத்தில், மயக்கம் தெளிந்த இலக்குமணனால் அங்கபங்கப்படுத்தப்பட்ட அயோமுகி ஐயோ! ஐயோ! என்றலறிய குரலைக் கேட்டான். அக்குரல் தம்பியோடு சண்டைசெய்யும் அரக்கர்குரலன்றென்றும் ஊறுபட்ட அரக்கி ஒருத்தி அரற்றிய கூக்குரலென்றும் அறிந்தான்.

## இராமன் இலக்குமணனைச் சந்தித்துத் தழுவுதல்.

உடனே, அவன் அக்கினி அத்திரத்தைச் சுழற்ற, இரவு பகல்போலாயிற்று. சத்தம் கேட்ட திக்குநோக்கி மிக்கு விரைந்து செல்ல,

*சடாயு உயிர்நீத்த படலம் கஅச. † இப்படலம் எஎ. ‡ மருத்துமலைப் படலம் எஎ.

இலக்குமணன், "வருந்தாதே! வருந்தாதே! வந்தேன்! வந்தேன்!" என்று, வந்து வணங்கினான். இழந்த கண்ணை அடைந்த அந்தகன் போலவும் பிரிந்த கன்றை அடைந்த பாற்பசுப் போலவும் மிகுந்த மகிழ்ச்சியுற்றுத் தம்பியை எடுத்துத் தழுவினான். தழுவித் தாரை தாரையாக ஒழுகும் ஆனந்தக் கண்ணீரால் அபிடேகம் பண்ணி, "நிகழ்ந்தது யாது?" என, அதனைத் தம்பி சாற்றக் கேட்டு, அவன் அபாயத்துள் அகப்பட்டதற்கு வருத்தமும் அதனினின்று தப்பியதற்குச் சந்தோடமும் அடைந்து "எனக்குத் தேவர்களே பகைவராயினும் ஆகுக; தேவர்கள் கிடக்க, திரிமூர்த்திகளே பகைவராயினும் ஆகுக; நீ இருக்கும் போது வேறு காவல் யாது வேண்டும்" என்று கூறிப் பின்னும் கூறுகின்றான்.]

தனக்கு இலக்குமணன்பால் உள்ள அத்தியந்த அன்பை
இராமன் பாராட்டுதல்.

433 "பிரிபவர் யாவரும் பிரிக, பேரிடர்
வருவன யாவையும் வருக, வார்கழற்
பெருவலி வீரநிற் பிரியின் அல்லது
பருவரல் என்வயிற் பயிலற் பாலதோ?"

இ-ள். "மகா வீர! (என்னைப்) பிரிபவர்களெல்லாரும் பிரிந்திடுக; வரக்கடவனவாகிய ஆபத்துக்களெல்லாம் வந்திடுக; (அப்பிரிவுகளாலும் ஆபத்துக்களாலும் என்பால் துன்பம் அணுகாது.) உன் (ஒருத்த)னைப் பிரிந்தாலல்லது, துன்பம் என்பால் நெருங்கற்பாலதாமோ? (ஆகாது)" (என்றான் இராமன்.)

பேர்இடர்—பெரிய ஆபத்து. வார்கழல்—நீண்ட வீரகண்டை. பருவரல்—துன்பம். பயிலல்—நெருங்கல். 'செருவலி வீரநிற் றீருமல்லது' என்பதும் பாடம்.

" 'இன்பொருள் எய்தலாகும் தெவ்வரைச் செகுக்கலாகும்—நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையும் நண்ணலாகும்—ஒண்பொருளாவதையா உடன்பிறப் பாக்கலாகா—எம்பியை யீங்குப் பெற்றேன் என்னெனக்கு அரியதென்றான்' என்ற சீவகசிந்தாமணிச்செய்யுள் இங்கே நோக்கத்தக்கது."

## இராமன் சீதையின் உருவெளித்தோற்றங்கண்டு மயங்கல்.

[பின்பு, இராமன் வருணமந்திரத்தைச் செபிக்க, வானம் நீர்பொழியப் பருகித் தாகவிடாய் தணிந்து, தம்பி தளிர்களும் மலர்களுங் கொண்டு பரப்பியமைத்த படுக்கையிற் பள்ளிகொண்டான். சீதையினது பிரிவாற்றுமையால் உணவுகொள்ளாதிருந்தவன் உறக்கமுங் கொள்ளானுய் வருந்தி இடைவிடாமல் அவளை நினைவாயிருந்ததனுல், அவள் உருவெளித்தோற்றம் உண்டாகக் கண்டான். கண்டவன் அவ்வுருவைத் தழுவமுயன்றபோது அது கைக்ககப்படாமையால் கவன்று, சீதைக்கு இடையில்லாமற்போனதுபோல* எல்லா உறுப்புக்களுமே இல்லாமற்போயினவோ என்று மயங்கினுன்.

## இராமன் கனவிற்கண்ட சீதையை நனவிற் காணுமல் வருந்தல்.

அதன்பின், அவன், தான் விழித்திருப்பதாக நினைத்திருக்கும் போது நிகழ்ந்த நித்திரையில்† சீதையைக் கலந்ததாகக் கனவுகண்டு, அந்த அறிபாது தூங்கிய தூக்கம் அறியாமலே அகன்றபோது அவளைக் காணுமையால், 'இப்பொழுதுதானே தழுவிக்கொண்டிருந்தேனே, எப்படி வழுவிப்போயினுள்? தழுவியது, சாக்கிரமோ? கனவுதானே? கண்ணுறங்காமல் கனவுண்டாகுமோ?' என்று கருதி வருந்தினுன்.

## சூரியோதய வருணனை.

இரவு காரணமாக விரகவேதனைகூரும் இராமனுக்கு விரகம்தணிய இரவை அகற்றுவான்போலச் சூரியன் தோன்றினுன்.]

அயோமுகிப்படலம் முற்றியது.

---

*எழில்மிகுத்தமாதருக்கு இடைசிறுத்திருத்தல் குறிக்க, இடையில்லையெனல் கவிமரபு.

†இங்கே "சிவராத்திரிப்—போததயி லோமென்ற விரதியரும் அறிதுயில் போலே யிருந்து துயில்வார்" என்ற தாயுமானவர்வாக்கு நோக்குதற்குரியது.

## கவந்தப் படலம்.

கவந்தன் என்னும் இராக்கதனைப்பற்றிக் கூறுவது. "கவந்தம்—கபந்தம் என்ற வடசொல்லின் திரிபு; இதற்கு - தலையற்றதும் தொழிலுடன்கூடியதுமான உடல் என்று பொருள்."

### இராமலக்குமணர் கவந்தன் தோள்களை வெட்டுதல்.

[சூரியோதயமாகவே, இராமலக்குமணர், சீதையைத்தேடிச் செல்வாராய், உச்சிநேரம் உற்றபோது, கவந்தன் இருந்த காட்டை அடைந்தார்கள். அவன், உலகத்தில் உள்ள பாவமெல்லாம் ஒருங்கு திரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்ற கரிய பெரிய காத்திரம்படைத்தவன்; மலைபோலும் தலை, கழுத்திலன்றி வயிற்றிலுள்ளவன்; தலையில் வெப்பம் மிக்கு விளங்கிய விழிகள் மலையிற்பதிக்கப்பட்ட இரண்டு சூரியர் போன்றன; கைகள் மந்தரமலையான மத்தினைச் சுற்றின வாசுகிப்பாம்பாகிய வடத்தினது (வாலுந் தலையுமான) இருபுறமும் நீண்ட இரு பகுதிகள் போன்றன. அவன் அக்கைகளிரண்டையும் இருபுறத்தும் விரிய நீட்டி வளைத்து நடுவில் அகப்பட்ட பிராணிகளெல்லாவற்றையும் பிலம்போன்ற வாயுட் பெய்யப்போகும் சமயத்தில், இராமலக்குமணரும் அவன் கைகளினுள்ளே அகப்பட்டனர். அகப்பட்டவர்கள், அவன் கண்ணெதிருற, அவன் "தீவினைப்பயனால் என் கைக்குட் சிக்கிய நீவிர் யாவிர்?" என, அவர்கள் அவன் கூறியதுகேட்டுக் கோபங்கூர, அவன் "உங்களை விழுங்குவேன்" என வெகுண்டுகூற, அவர்கள், ஆளுக்கொரு தோளாக அவனுடைய இரண்டு தோள்களையும் வெட்டி வீழ்த்தினர்கள்.]

### கைகள் களையப்பட்ட கவந்தன் காட்சி.

434 கைகள் அற்றது குருதியா றொழுகிய கவந்தன்,
மெய்யின் மேற்கொடு இழக்குறப் பெருநதி விரவும்
சைய மாநெடும் தாழ்வரைத் தனிவரை தன்னோ
டையம் நீங்கிய பேரெழில் உவமையன் ஆனான்,

இ-ள். கைகள் அறுபட்டு (உடலின் இருபக்கமும்) இரத்த (வெள்ள)ம் பெருகியோடப்பெற்ற கவந்தன், (ஒன்று) மேற்குத் திசையையும் (ஒன்று) கிழக்குத் திசையையும் அடையும்படி (இரண்டு) பெரிய ஆறுகள் (போகுதல்) பொருந்திய மலையோடு உவமையுடையவனானன்.

உதுதல் - சிந்துதல். ஒழுகுதல்—பெருகியோடுதல் (தமிழ்ச் சொல்லகராதி). மெய் (மலையின்) உடல். உறுதல்—அடைதல். விரவுதல்-கலத்தல்—சேர்தல். சையம் மா நெடு தாழ்வரை தனி வரை—கற்கள் (நிறைந்த) மிகப்பெரிய சாரலை (மலைப்பக்கத்தை) யுடைய ஒப்பற்ற மலை. ஐயம்-சந்தேகம். பேர் எழில்-மிக்கஅழகு. வெங்குருதி என்பதும் பாடம்.

தெளிவான மிகப் பொருத்தமான உவமையென்பார் ஐயம் நீங்கிய பேர் எழில் உவமை யென்றார்.

"கவந்தனது உடலுக்கு மலையும் தோள்கள் அறுபட்ட இரண்டு பக்கங்களிலும் பெருகுகிற இரத்தவெள்ளத்துக்கு மலையின் கிழக்கு மேற்கு என்னும் இரண்டுபக்கங்களிலும் பெருகுகிற ஆற்றுவெள்ளமும் உவமை. சையமால்வரை, பெரிய ஸஹ்யகிரியுமாம்."

கிழக்கே செல்லும் ஆற்றை நதியென்றும் மேற்கே செல்லும் ஆற்றை நதமென்றும் கூறுவர்.

[இராமனால் தீண்டப்பெற்றதனால் தீய இராக்கததேகம் நீங்கித் தூய கந்தருவ சரீரம் பெற்ற கவந்தன, கூட்டினின்றெழும் பறவைபோல, இறந்த உடலினின்றெழுந்து, ஆகாயத்தை அடைந்து, இராமனை நோக்கித் "தேவாதிதேவனே! நீ எனக்குச் சாபசரீரத்தைத் தவிர்த்துத் தருமசரீரத்தைத் தந்தாய். எளியேன் உங்களிருவருக்கும் உரைப்பது ஒன்று உள்ளது. கேளுங்கள். நீங்கள் துணைவேண்டாத சூராயினும், துணைதேடிக்கோடல் சூழ்ச்சித்திறமாம். உகமுடிவுகாலத்தில் ஒருதானே உலகங்களனைத்தையும் ஒருங்கழிக்கும் உருத்திரமூர்த்தி பூதகணங்

களைத் துணையாகக்கொண்டு பூதநாதனெனும் பெயர்பூண்டுள்ளான். சமீபத்துள்ள சவரியென்னும் தவமகளைச் சந்தித்து, அவளால் ருசியமூக பருவதத்துக்கு வழிதெரிந்து, அங்கே வாழும் சுக்கிரீவனைத் துணையாகக் கொண்டு அவனுல் சீதையைத் தேடுதல் சிறந்ததென்று செப்பித் தெண்டனிட்டுச் சென்ருன். இராமலக்குணர் வழிச்சென்று இரவில் மதங்காச்சிரமத்தில் வைகினர்கள்.]

கவந்தப் படலம் முற்றிற்று.

---

## சவரி பிறப்புநீங்கு படலம்.

சவரி என்னும் தவவேடம் தாங்கிய வேடமாது இராமனுல் பிறப்பு நீங்கி வீடுசேர்ந்ததைக் கூறுவது.

### இராமன் சவரியின் விருந்தாதலும் அவள் வீடுபேறுதலும்.

[மதங்காச்சிரமத்தில் உள்ள தவசிகளுக்குந் தொண்டுசெய்து கொண்டு சந்நியாசியாகச் சஞ்சரித்துக்கொண்டிருந்த சவரியென்பவள், அங்கே இராமன் வருதலை முன்னதாக அறிந்து, அவனுக்காக அருமையான தீங்கனிகளைச் சேர்த்துவைத்திருந்தாள். அவளைக் கண்டு அவன் சேமம் விசாரிக்க, அவள், ஆனந்தக்கண்ணீர் பெருக அன்புமீதூர வணங்கிச் சித்தமாக வைத்திருந்த தீங்கனிகளை இனிதளித்து உபசரித்து விருந்தருந்தச் செய்தாள். பின்பு, சுக்கிரீவனிருக்கும் இடத்துக்குச் செல்லும் வழியைச் சொல்லிவிட்டு, இராமனைத் தொழுது கொண்டு யோகமுயற்சியால் தேகத்தைவிட்டு முத்தியையுற்ருள். இராமலக்குமணர் அவள் சொல்லிய வழியே செல்லுபவராய்ப் பம்பைப்பொய்கைப்பக்கம் வந்துசேர்ந்தார்கள்.]

சவரி பிறப்புநீங்குபடலம் முற்றிற்று.

ஆரணியகாண்டம் முற்றுப்பெற்றது.

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

# தொல்காப்பியச் சூத்திரப்பொருளாராய்ச்சி.

[எசு-ம் பக்கத்தொடர்ச்சி.]

இனி, "உரையாசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் என்னும் இவர்கள் பெயரெச்சவிறு தொக்கது வினைத்தொகை என்பர். சேனாவரையர் அவ்வாறு கூறாது பெயரெச்சப்பொருள்பட வினை முதனிலையும் பெயருந் தொக்கு (சேர்ந்து) வருவது வினைத்தொகை என்று கூறுவர். சேனாவரையர் இவ்வாறு கூறுவதற்குக் காட்டும் பிரமாணம் "செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின், மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும்........புணரிய நிலையிடை யுணரத் தோன்றா" என்னும் பகுதியுள், 'புணரிய நிலையிடை யுணரத் தோன்றா' என ஆசிரியர் கூறியதே. உரையாசிரியர், அச்சூத்திரவுரையில் பெயரெச்சமும் உலகத்தில் வழக்குமாறு கொள்ளவேண்டுமேயன்றிப் புணரியல் விதிகளைக் கொள்ளக்கூடா தென்பது பெறப்படும் எனக் கூறினர். அதே மேலானது என்பது தோன்றுகின்றது" எனக் குறிப்பாசிரியர் கூறினார்.

உரையாசிரியர், 'கருஞ்சான்றான்' என்னும் பண்புத்தொகையுள், 'கரும்' என்பது 'கரியான்' எனப் பால்காட்டிநிற்றலிற் பிரித்துப் புணர்க்கப்படாதென்றும், 'கொல்' என்னுந் தொழின்மையுணரநின்ற சொல், 'கொல்யானை' எனத் தொகையாயவழிக் 'கொன்ற' எனக் காலங்காட்டிநிற்றலிற்புணர்க்கப்படாதாயிற்று என்றுங் கூறியவற்றை நோக்கும்போது, அவர்க்கும் அத்தொகைகள் பிரிக்கப்படாவென்பதேகருத்தாதல் நன்குபெறப்படும். ஆயினும், அவர் 'செய்யுஞ் செய்த என்னுங் கிளவியின், மெய்யொருங்கியலுந் தொழிறொகு மொழியும்' என்பதனால் பெயரெச்ச விறுகள் தொக்கவென்பதே ஆசிரியர்கருத்தாமெனக் கொண்டு, 'கொல்யானை' என்பது 'காலங்காட்டும் பெயரெச்சவிறு குறைந்துவருவதே வினைத்தொகையாம்' எனத் தொகையென்னுங் கருத்தின்மாத்திரம் சேனாவரையரோடு மாறுபடுகின்றனர். சேனாவரையர், 'கொல்யானை' என்னும் வினைத்தொகையைக் 'கொன்ற' எனனும் பெயரெச்சவிறு குறைந்துநின்றதெனக் கொள்ளின், தொகைப்பொருள் சிதைவதேயன்

றிப் 'புணரிய நிலையிடை உணரத் தோன்று' என்பதற் கோர் காரணமின்றாம் எனக் கூறி அவருரையை மறுக்கின்றனர். சேனாவரையர் கருத்து:- 'கொல் யானை' என்பதில் 'கொன்ற' என்னும் பெயரெச்சவீறு குறைந்து 'கொல்' என நின்றதெனின், அது பெயரெச்சவீறு என்பது நன்குபுலப்படுதலின், அதனை ஆசிரியர் பெயரெச்சவீறாகவேவைத்துப் பெயரெச்சவீறு குறைந்து வருமொழியோடு புணர்ந்ததாக விதிகூறுவார்; 'சாக்குத்தினான்' என்பதற்கு விதிகூறியதுபோல. அங்ஙனங் கூறாது "புணரிய நிலையிடை யுணரத் தோன்று" என்றமையான் ஆசிரியர்க்கது கருத்தன்றாம். அன்றியும் ஈறு கெட்டுநின்றதெனக்கூறுமிடத்து அது தொகையுமன்றாம். ஆதலானும் பெயரெச்சப்பொருள்தருமென்பதே ஆசிரியர்கருத்தாமன்றி ஈறுதொக்கது என்பது கருத்தாகாதென்க. அங்ஙனேல் 'கொல்' என வைத்துப் புணர்க்கலாமே எனின், அது வருமொழியோடு தொக்குநின்றவழியன்றிப் பெயரெச்சப்பொருடாராமையின் அங்ஙனமும் பிரித்துப் புணர்த்தல் கூடாதென்பதாம். இதுபற்றியே இவற்றைப் பிரிவிலொட்டுக்கள் எனச் சேனாவரையர் கூறினர். இதுபோல்வனவற்றை வடநூலார் நித்தியசமாசன் என்பர்.

இனிக் 'கொல்யானை' என்பது, 'கொன்றயானை' எனவும், 'கொல்லும் யானை' எனவும் பொருடரலின் இவற்றைப் பிரித்து ஓரீறாக வைத்துப் புணர்த்தல் கூடாமையின் 'புணரிய நிலையிடை யுணரத் தோன்று' என்றார் ஆசிரியர். ஆதலின், பொருடரல்பற்றித் தொகை என்று சேனாவரையர் கூறியது பொருந்தாதென்று நச்சினார்க்கினியர் கூறினர். இரண்டு ஈற்றையும் வெவ்வேறாக வைத்துப் புணர்க்கக்கூடாமையின், 'புணரிய நிலையிடை உணரத் தோன்று' எனின், 'கரியன்' என்னும் பண்பீறு கெட்டுப் பார்ப்பான் என்னுஞ் சொல்லோடு தொக்குக் 'கரும்பார்ப்பான்' என நின்றவழிக் 'கரியன்' என்பது ஓரீறாகவே நிற்றலின், ஆண்டு ஐம்பாலறியும் ஒவ்வோரீற்றையும் வருமொழிவேறுபாடுபற்றி வெவ்வேறீறாகவே வைத்துப் புணர்க்கலாமாதலின் ஈறுபற்றி ஆசிரியர் ஒதினாரென்றல் பொருந்தாமை காண்க. அதுவே உரையாசிரியர்கருத்துமாதல் அவருரை நோக்கித் தெளிக. ஆதலிற் சேனாவரையர் கூறியவாறு பெயரெச்சப் பொருள்படத் தொக்கதே வினைத்தொகை என்பது பொருத்தமாதல் காண்க. அதற்குச் சான்றாகக் 'கரு' என்பது ஐம்பான்மொழிகளோடும் கூடும்வழி அவ்வப் பாற்பொருளைத் தருதலால் அறியப்படும். இனி அன்மொழியினும் தொக்குநின்றதின்மையுமுணர்க.

'கருங்குழல் வந்தாள்' என்புழி, 'உடையாள்' என்னு மொழி தொக்கு நின்றதன்றோ வெனின், அன்று; அம்மொழி தொகையாற்றலால் விரித்துக்கொள்ளப்பட்டதேயா மாதலின். ஏனைய தொகைகளும் இவ்வாறே பொருள்நோக்கி உருபு முதலிய விரிக்கப்படுதல் காண்க. இது பற்றியே சேனாவரையரும், 'தொகுதல்—உருபுமறைதல்; வெளிப்படாது நிற்றல்' என்றனர். நன்னூலாரும் "காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" என்றார். இக்கொள்கை உற்றுநோக்குப்போது ஆன்றோர்க்கு மிக்க வியப்பையும் இன்பையும் அளிக்காதுபோகா தென்பது துணிபு.

"ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்" என்புழியும், தொகுதல், மறைதல் என்பதே சேனாவரையர் கருத்தாதலின், 'ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்' என்புழி, அறியும் என்பது பண்புக்கு விசேடணமாதலின் சேனாவரையர்மதம் எவ்வாறு பொருந்தும்; எனக் குறிப்பாசிரியர் கூறிய தடைக்கும் விடை ஈண்டே பெறப்பட்டமை காண்க.

வினை என்பது தாது என்றும், அது தொழின்மாத்திர முணர்த்தி நிற்கிறதென்றும், அதனைத் தொழிற்பெயரென்றல் ஆசிரியர் கருத்தென்றும் சேனாவரையர் கூறுவது பொருந்துமா? என்பது ஆராயத்தக்கது என்றுங் குறிப்பாசிரியர் உரைத்துள்ளார். கொல் முதலிய தாதுக்கள் புடைபெயர்ச்சியின்றி, அத்தொழின்மாத்திர முணர்த்தி அத்தொழிற்குப் பெயராய்நிற்றலின், அதனைத் தொழிற்பெயரெனக் கோடல் ஆசிரியர் கருத்தென்பது,

"ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்ன
ரல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையி னவ்வெழுத் துமிகுமே
யுகரம் வருத லாவயி னான." (புள்ளி. சூத்திரம்-க) என்றும்,

"தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல" (ஷ கூஉ) என்றும், ஆசிரியர் கூறியவாற்றா னறியக்கிடத்தலின் அவ்வாறு கூறினார் என்பது. இதுபற்றியே, நட முதலிய வினைகளை முதனிலைத் தொழிற்பெயர் எனக் கோடல் ஆசிரியர்கருத்தாதலினாலேயே இருபெயரொட்டும் எனக் கூறிய வதனுள் வினைத்தொகையையும் அடக்கினார் ஆசிரியர் எனச் சேனாவரைய ருரைத்ததூஉமென்க. நட வா முதலிய வினைகளை முதனிலைத்தொழிற்பெயரெனக் கோடல் நன்னூலார்க்குங் கருத்தாதல், "ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்" (மெய் சஎ-ம் சூத்திரம்) எனக் கூறுதலாலும், "நடவா மடிசீ விடு..........வினைப்

பகாப் பதமே" (பத—கக) என்னுஞ் சூத்திரவுரையில், "இங்ஙனம் முதனிலை புடைபெயர்தலே வினையாதலின் எல்லாவினைச்சொற்களும் பிறத்தற்கு மூலமாகிய பொது முதனிலைத்தனிவினைப்பெயரொன்றே கொள்க" என்பதனானு முணர்க.

மேலும், இருபெயரொட்டு அன்மொழித்தொகையைக் குறிக்க வில்லை என்ற தெய்வச்சிலையார் கொள்கையைக் கொள்ளின், சேனாவரை யர்கூறியவாறு கொள்ளவேண்டாமெனவுங் குறிப்பாசிரியர்கூறினார். தெய்வச்சிலையார் உரை வெளிவாராமையான் அவர்கருத்தை முற்ற உணரமுடியாதாயினும் பின்வரும் "பண்புதொக வரூஉங் கிளவி யானும்" (எச். உஉ) என்னுஞ் சூத்திரஉரைக்குறிப்பினுள், தெய்வச்சிலையார் கருத்தைக் குறிப்பாசிரியர் கூறியுள்ளாராதலின், ஒருவாறு அதனை யுணர்ந்து அதுவும் பொருந்தாமை காட்டுதும்:—

தெய்வச்சிலையார், 'துடியிடை,' 'தாழ்குழல்' என்பன இருபெய ரொட்டுஆகுபெயரென்றும், உவமத்தொகை வினைத்தொகைகளை, ஆசிரியர் எடுத்தோதாமையால், அவை அன்மொழித்தொகையன்றென் றும், ஆகுபெயராவது ஒட்டுப்பட்டபெயரோடு ஒற்றுமைப்பட்டு வருவது; அன்மொழித்தொகை அப்பொருளின் வேறுபட்டுவருவது; என்றும் கொள்ளுகின்றார். 'கருங்குழல்' முதலிய அன்மொழித்தொகை முதலியவும் ஒட்டுப்பட்ட பெயரோடு ஒற்றுமைப்பட்டு வருதலின் ஒட்டுப்பட்டபெயரோடு வேறுபட்டுவரும் என்ற நியதி ஆண்டுச் செல்லா மையின் அவர்கருத்து எவ்வாறு பொருந்தும்? அங்ஙனமன்று; தொகையுள்ளும் ஒற்றுமைப்பட்டுவருவன ஆகுபெயர், வேற்றுமைப் பட்டுவருவன அன்மொழித்தொகை என்றுலெண்ணையெனின், ஆசிரியர் அங்ஙனம் எடுத்தோதாமையானும், ஆகுபெயரும் ஒற்றுமைப்பட்டும் இன்றியும் வருமென ஆசிரியரே கூறுதலின் ஆண்டும் ஒற்றுமைப்பட்டு வருமென்னும் நியதி செல்லாமையானும் தெய்வச்சிலையார்கருத்துப் பொருந்தாதென்பதே தேற்றம்; ஆதலானும் சேனாவரையர்கருத்தே பொருத்தமாதல் காண்க.

மேலும், 'ஐம்பாலறியும்' என்பது பண்பைவிசேடித்தலின், சேனா வரையர்கருத்து எவ்வாறு பொருந்தும்? என்றும் குறிப்பாசிரியர் கூறுகின்றார். குறிப்பாசிரியர்கருத்தின்படி பண்பை விசேடித்துவந்த தெனக் கொள்ளினும், அப்பண்பு வருமொழிகளோடு சேர்ந்துநின்ற விடத்தேயே ஐம்பாலையு முணர்த்துமன்றித் தனித்துநின் றுணர்த்தா

மையின் அறியும் பண்புதொகுமொழி என்பதற்கு 'அறிதற்குக் காரணமாகிய பண்பு தொக்கமொழி' என்றே பொருளாம். நச்சினார்க்கினியரும் 'அறியும்' என்பதற்கு அறிதற்குக் காரணமாகிய என்றே பொருள்கூறினர். இனிப் பண்பிறுகள் தொக்க எனினும் தொகுதல் என்பதற்கு மறைதல் என்று சேனாவரையர் கூறுதலின் அவ்வாறு கூறலும் பொருந்தும். இன்னும் பண்புதொகுமொழியும் என்பதைப் பண்புத்தொகைமொழி என ஒருசொல்லாகக்கொண்டு அதனை அறியும் என்பது விசேடித்துவந்ததாகப் பொருள்கூறினும் அமையும். ஆதலின் சேனாவரையர்கருத்து ஆண்டும் மாறுபடுதலில்லை என்க.

இனிச் சேனாவரையர் 'நிலங்கடந்தான்' முதலியவற்றை, ஒருசொல்லாகக் கொண்டதன் காரணம் "தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும்' என்பதில் வரும் 'தொகுதி' என்பதே எனக் குறிப்பாசிரியர் கூறினார். 'தொகுதி' என்பதனான்மாத்திரம் சேனாவரையர் அங்ஙனம் கொண்டாரல்லர்; ஆசிரியர், 'வேற்றுமை வினைபண் புவமை அன்மொழி' என்னும் அறுவகைத் தொகைகளையும் முற்கூறி, ஈற்றில், "எல்லாத் தொகையு மொருசொன் னடைய" எனத் தொகையெல்லாவற்றிற்கும் பொதுவாகக் கூறினமையும் அதற்கொரு காரணமாம். இச்சூத்திரத்தில், 'பெயரும் வினையும்' தொக்கன தொகையல்லவென ஆசிரியர் கூறுமையின் 'பெயரும் பெயரும்,' பெயரும் வினையும் தொக்க தொகையெல்லாவற்றையும் சேர்த்தே 'எல்லாத் தொகையும்' எனக் கூறினார் என்பது திண்ணம். இங்ஙனமன்றிப் பொருள்கோடன் முடியாமை கருதியே நச்சினார்க்கினியரும் பிரிந்திசைத்தவழியும், 'நிலங்கடந்தான்' முதலியவுந் தொகைச்சொல்லாகும் என இச்சூத்திரவுரையுட் கூறினார். அன்றியும், மேற்கூறிய வேற்றுமைத்தொகை முதலியவற்றை அனுவதித்து, "வேற்றுமைத்தொகையே," "உவமத்தொகையே," "பண்பின்றொகையே," "உம்மைத்தொகையே," "அன்மொழித்தொகையே," எனக் கூறிய வாசிரியர் வினைத்தொகையைமாத்திரம் அனுவதியாது வேறு பொருள்பட "வினையின்றொகுதி" எனக் கூறினார் என்றல் பொருந்தாதாகலானும் 'தொகுதி' என்பதற்குத் 'தொகை' என்பதே பொருள் என்றல் தேற்றமாம். அன்றியும் 'தோற்றம் வேண்டா' என்பதே உருபுமறைதலைக் காட்டலின 'தொகுதிக்கண்' என்பது 'தொகைக்கண்' என்னும் பொருளையே உணர்த்தவந்ததென்பதூஉந் தேற்றமாம்.

இன்னும், ஆசிரியர், 'தொகை' என்னும் சொற்குப் பிரதியாகத் 'தொகுதி' என்னுஞ்சொல்லைப் பிரயோகித்து, "இனைத்தெனவறிந்த.... ....வினைப்படு தொகுதி" என்றும், "உம்மை பெண்ணும்..................... தம்வயிற்றொகுதி கடப்பா டிலவே" என்றும் ஆளுதலானும் 'தொகுதி' என்பதற்குத் தொகை எனப் பொருள்கோடல் ஆசிரியர்க்குக் கருத்தாதல் பெறப்படும். தொகுதி—தொகைச்சொல். ஈண்டும் தொகுதல் பலபொருளின் சேர்வினையே குறித்தல் ஊகிக்கத்தக்கது.

இனிப் "பெயரினாகிய தொகையுமா ருளவே—அவ்வு முரிய வப்பா லான" என்னுஞ் சூத்திரத்துக்குச் சந்தர்ப்பத்திற்கு விரோதமாகப் பொருள்கூறினர் சேனாவரையர் எனவும் குறிப்பாசிரியர் கூறினார். தொகை இரண்டென்பதை யுணர்த்தவே 'தொகையும்' என உம்மை கொடுத்தார் எனச் சேனாவரையர் கூறியதே சந்தர்ப்பத்திற்கு விரோதமென்பது குறிப்பாசிரியர் கருத்து. ஒன்றற்கு ஓரிலக்கணமுணர்த்தும் போது அவ்வொன்றற்குரிய வேறிலக்கணமும் ஆண்டுக் கூறவேண்டியது அவசியமாயின் அதனையு முணர்த்திச்சேறல் ஆசிரியர் வழக்கேயாம். தொகை யிரண்டென்பது ஈண்டு உணர்த்தவேண்டியதின்றாயினும், பெயரினாகிய தொகையும் எழுவாயாய்நின்று பயனிலைகொள்ளுமெனின், மாணாக்கன் தொகை ஒன்றே எனக் கருதி இடர்ப்படுவானாதலின் அவ் விடர்ப்பாடு நீக்குமாறே உம்மையால் தொகை யிரண்டென்பது பெற வைத்து, 'தொகையுமாருளவே' என முடித்துக்கூறிப் பின் 'அவ்வு முரிய வப்பா லான' என ஆசிரியர் கூறினார் என்பது. இவ்வாறே நன்னூலாரும் எழுத்தின் பெயரிலக்கணமுணர்த்தத்தொடங்கி, விளங்கவைக்கு நோக்கமாக "இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின" எனப் பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கணத்தையும் மாணாக்கன் இனிது விளங்கற்பொருட்டுக் கூறிச்சேறலும் காண்க. இன்னும் இயைபுபட்ட விடத்தே ஓரிலக்கணத்தோடு அதனோடியைபுபட்ட வேறிலக்கணத்தையும் கூறல் ஆசிரியர்வழக்கென்பது, வேற்றுமையிலக்கணங்கூறுங்கால், இயைபுநோக்கி "பெயர்நிலைக் கிளவி காலந்தோன்றா" எனத் தொல்காப்பியர் கூறிச்சேறலானுங் காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

# குன்றத்தூர்க் கல்வெட்டுக்கள்.

———:(0):———

சைவநெறி தழைத்தோங்க அவதரித்த வள்ளலான சேக்கிழார் குடியிற் பிறந்த அருண்மொழியாம் சேக்கிழாரடிகள் அவதரித்த குன்றத்தூர் என்ற திருப்பதி செங்கற்பட்டு ஜில்லாவில் ஸ்ரீபெரும்பூதூர்த்தாலூக்காவில் உள்ள ஒரு சிற்றூராகவிருக்கிறது. சேக்கிழார் புராணத்திற்கண்டபடி தொண்டைமண்டலத்திலே புலியூர்க்கோட்டத்திலே யுள்ள நாடுகளிற் குன்றத்தூர்நாடும் ஒன்று. அந்நாட்டுக்குக் குன்றத்தூர் தலைநகர். பிற்காலத்திலே, சற்றேறக்குறைய முதற்குலோத்துங்கன் நாள்முதல் கோட்டங்களெல்லாம் வளநாடாக மாற்றப்பட்டன. புழற்கோட்டம் வீரசோழவளநாடு என மாற்றப்பட்டது. புலியூர்க் கோட்டம் குலோத்துங்கசோழவளநாடாயிற்று. இவ்வாறு மாறின பல. குன்றத்தூர் என்ற பெருடைய ஊர் ஒன்று ஆமூர்க்கோட்டத்துள்ளது. சேக்கிழாரது குன்றைநகர் அஃதன்று.

புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூரிலே ஒரு சிறு குன்று உண்டு. அதன்மேல் முருகக்கடவுள் கோயில்கொண்டுள்ளார். அக்கோயிலின் மகாமண்டபத்தின் வெளிப்புறம் வடபக்கமாக ஒற்றைக்கல்லில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மற்றொரு கல்லும் இருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. அவ்வெழுத்துக்கள் (சேர்த்து வாசிக்கமுடியாதபடி) பாக்களின் பகுதிகளாகக் காணப்படுகின்றன. சொக்க மங்கன் என்பார் அங்கே பல திருப்பணிகள் செய்ததாகக் காணப்படுகின்றது. அவர் சேக்கிழார்மண்டபம் என ஒன்று கட்டியதாகவும் அக் கல்வெட்டிலிருந்து அறியக்கிடக்கின்றது.

குன்றின் அடிவாரத்திலுள்ள ஊரை இதுபொழுது நத்தம் எனக் கூறுகின்றனர். அங்கே ஒரு சிவாலயம் இடிந்து பாழாகிவிட்டது. அதனிலுள்ள திருவுருவங்கள் மற்றொரு சிவாலயத்திற் கொண்டுபோய் வைக்கப்பட்டுள்ளன. அக் கோயில் கசபிருஷ்டமாகக் கட்டப்பட்டுள்ளது. அதனில் ஒரு கல்வெட்டு உண்டு. அது வருமாறு:—

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீவீரகண்ட கோபாலதேவர்க்கு யாண்டுமூன்றாவது: குன்றத்தூர்நாட்டு குன்றத்தூர் உடையார் திருவாலீஸ்வரமுடைய நாயனார்கோயில் குன்றை ரிஷபப்பிள்ளையாருக்கு கோயில் சிவப்பிராமணரில் மகா ஆதியுக்கபட்டபிரான்.............

அங்கே பெருமாள்கோயில் ஒன்று இருக்கின்றது. அதனிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. மற்றொரு சிவன்கோயிலிலும் கல்வெட்டுக்கள் உண்டு. அவை புதைபட்டிருக்கின்றன. சிவன்கோயிலுக்கெதிரில் ஒரு தூணில் கிருஷ்ணதேவராயர் கல்வெட் டிருக்கிறது. அது பின்னர் வெளியிடப்படும்.

சேக்கிழாரடிகள் கட்டிய திருநாகேசுரம் ஆலயம் இந்த நத்தம் கிராமத்திற்கு ஈசானதிக்கில் சுமார் ஒரு மைல்தூரத்தி லிருக்கின்றது. அக்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் உண்டு. அவற்றுட் சிலவற்றைக் கீழே குறிக்கின்றேன்.

### அம்மன்கோயிலின் பின்புறம் மதிலிற் காணப்படுவது.

I. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்ரவர்த்திகள் மதிரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு பதினொன்றாவது ஜெயங்கொண்டசோழமண்டலத்து புலியூர்க்கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டுக் குன்றத்தூர்நாட்டு குன்றை திருஉடையார் திருநாகிசுரமுடையார் கோயில் காணி உடைய திருவுண்ணாழிகை மகாசபையோம் இக்கோயில் தேவர்பேரால் சன்னாழி கோமலை[ட]ந்தாசான் வுண்ணாழிகை நங்கை இந்நாயனார்க்கு சந்திராதித்தல் செய்வதாக இவர்பக்கல் நங்கைகொண்ட சந்திவிளக்கு ஒன்றுக்கு கொண்ட ஈழக் காசு உ. இவ் ஈழக்காசு இரண்டும் உபயமாகக் கைக்கொண்டு சந்திராதித்தவரை விளக்கு எரிக்கக் கடவோம். திருவுண்ணாழி மகாசபையோம்.

II. (1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு ௰-வது; ஜயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க்கோட்ட (2) மான குலோத்துங்கசோழவளநாட்டுக் குன்றத்தூர்நாட்டுக் குன்றத்தூர் உடையார் திருநாகீசுரமுடையநாயினார் கோயிற் காணி உடை (3) ய திருவுண்ணாழிகைச் சபையோம் இந்நாயனார்க்கு வெயுலகாவிதன் எழுத்து:...............................

பின்வரும் கல்வெட்டு காஞ்சிபுரம் அருளாளப்பெருமாள்கோயில் அபிஷேகமண்டபத்தின் வடபுறம் காணப்படுவது. இதிற்கண்ட விசயகண்ட கோபாலனைப்பற்றிப் பின்னொருசமயம் விவரிப்பேன்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ மதுராந்தக பொத்தப்பிச்சோழன் மனுமசித்தரைசன் (2) திருக்காளத்திதேவனான கண்டகோபாலனேன் ஜயங்கொண்ட சோழ (3) மண்டலத்து எயிற்கோட்டத்துக் காஞ்சிபுரத்துத் திருவத்தியூர் நின்றருளி (4) அருளின அருளாளப்பெருமாளுக்கு திருமாலை எடுக்கற தாத நம்பி மணிக்கு (5) திருநந்தவனப்புறமாகக் காவியூர்க்கோட்டத்துக் காவியூர் நாற்பாற் கெல்லை (6) யும் உட்பட உள்ளூர்த் தேவதானந் திருவிடையாட்டமும் இவ்வூர்க்கு மேற்கெல் (7) லையில் முன்பு திருநந்தவனப்புறமாய்ச் சென்றுவந்த நிலம் மூவேலியும் மு (8) ன்பிலாண கோவற்றித் திருமாலை எடுத்துப்போந்த திருவேழண்டமா (9) ய பெருமாள் தாதனே திருநந்தவனப்புறமாகப் பற்றித் திருமாலை [கொ] ண்டு தர (10) ப் போதவும். நீக்கி நின்ற நிலம் நன்செய் புன்செய் உள்பட்ட கடமைகளும் (11) கமுகும் இலைக்கொடியும் கரும்பும் பட்டப்பாழும் காசாயம் இதெல்லாம் உள்பட (12) அனைத்தாயங்களும்புறக்கலனையும் உட்பட இராஜராஜதேவர் (13) க்குப் பத்தொன்பதாவது வைகாசி மாஸம்முத லித்தாத நம்பிமார்க்குத் திருநந் (14) தவனப்புறமாகச் செல்வதாக இட்டோம். மதுராந்தகப் பொத்தப்பிச் சோழம (15) னுமசித்தரைசன் திருக்காளத்திதேவன் கண்டகோபாலனேன்—இருபத்துநாலா (16) வது ஆடிமாஸத்து எழுதின திருமுகப்படி மதுராந்தக பொத்தப்பிச்சோழன் ஷ (17) யூர் ஊர் வரக்கண்டு விடைதந்ததாவது:—தங்களூரில் கண்டகோபால விண்ணகரா (18) ன திருமடைவிளாகம் சூழ அகரமாக ஏறின [ஸட்ட[ர] களுக்கு தங்களூரகத்துக்குத் தெற்கு உத்தரான் (19) மேலூர்க்குப் போன பெருவழிக்கு மேற்கு, திருவாழிப்புரப்பினூர் ஏரிக்குக் கிழக்கு, தெற்குப்பொரம (20) னூர் எல்லையிலே ஊர்உட்பட நிலம் பன்னிரண்டு வேலியும் திருத்தலான நிலம் திருத்திக் (21) கொள்ளவும். இருபத்துநாலாவது ஆடிமாஸமுதல் அகரமாக அனைத்து ஆயங்களும் உள்பட நாட்டோ (22) ம் பெருமாள் கோயிலில் காவியூரில் திருநந்தவனபபுறமாக வெட்டின கல்வெட்டிலே (23) .........அகரமாக நீக்கி விட்டு ஶிலாலேகெ பண்ணிக்கொடுத்தோம் இப்ப (24) டி இவை அருளாள ஶ்ரீய வஷணா ஸநஶூ௦வெ

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரைச்

சோமசுந்தரதேசிகன்.

---

# புறநானூற்றின் பழமை.

சென்னை ஸர்வகலாசாலையாரால் வெளியிடப்பட்டதும், மகா-ா-ா-ஸ்ரீ கே. என். சிவராஜபிள்ளை பி. ஏ., அவர்களால் எழுதப்பட்டதுமான ‘உந்து என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழைமை’ என்ற நூலுள் புறநானூற்றின் சிலபகுதிகள் தொல்காப்பியர்காலத்துக்கு முற்பட்டன என்று முடிவுகூறப்பட்டுளது. அதற்குச் சிறந்தகாரணங்கள் மூன்றாகும்:—(1) ‘அது (உந்து) நிகழ்காலத்தைக்குறிக்குமென்று தமிழிலக்கணநூலார் எங்கேனும் எடுத்துக் கூறினாரல்லர்’ (பக். 38) என்பது ஒன்று; (2) ‘உம் என்னும் இடைச்சொற்பொருளை எட்டெனப் பாகுபாடுசெய்துரைத்த தொல்காப்பியர் ஒரு வினைச்சொல்லின் ஈற்றில் நிற்கும் ‘உம்’ விகுதியாய இடைச்சொல்லின்பொருளைச் சுட்டிப்போந்தாரல்லரென்பது தெளிவே’ (பக். 21) என்பது இரண்டாவது. (3) ‘தமிழுக்குப் பண்டைஇலக்கணவாசிரியராய தொல்காப்பியனாரோ உந்தீற்றுப்பெயரெச்சத்திற்கெனக் கருதத்தக்க சூத்திரம் ஒன்றியற்றினாரேயன்றி, உந்தீற்று வினைமுற்றுக்களைப் பற்றித் தமது நூலில் யாண்டும் யாதுங் கூறிற்றிலர்’ (பக். 20) என்பது மூன்றாவது.

‘உம்முந் தாகு மிடனுமா ருண்டே’ (தொல். சொல். இடை 41) என்ற சூத்திரத்தையும், ‘பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை—யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்—செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா’ (தொல். சொல். வினை 30) என்ற சூத்திரத்தையும் நோக்கின் தொல்காப்பியர் வெளிப்படையாகவே உம்மீற்றுச்சொல் நிகழ்காலத்தில் முற்றாகவருமென்றும், அஃது ஒரோவிடத்தில் ‘உந்து’ ஆக மாறும் என்றும் கூறினாராவர் என்பது விளங்கும்; ஆதலின் உந்து நிகழ்காலத்தைக் குறிக்குமென்று தமிழிலக்கணநூலார் எங்கேனும் எடுத்துக் கூறினாரல்லர் என்று கூறுவது நேரிதன்று.

'உம்' என்னும் இடைச்சொற்பொருளை எட்டெனப் பாகுபாடு செய்த ஆசிரியர் வினைமுற்றுப்பொருளைக் கூறவில்லை யென்ற இரண்டாவதுகாரணமும் நேரிதன்று; ஏனெனில் உம்மின் வினைமுற்றுப் பொருளை இடையியலிற் கூறாதுபோயினும், வினையியலுள் 'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை-யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்-செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா' என்ற சூத்திரத்தில் வெளிப் படையாகவே நிகழ்காலத்தில் படர்க்கை ஆண்பால், படர்க்கைப் பெண் பால், படர்க்கை யொன்றன்பால், படர்க்கைப் பலவின்பால் என்ற பொருள்களில் உம்மீற்று வினைமுற்று வரும் என்று ஆசிரியர் தொல் காப்பியனார்கூறியது காண்க. 'எச்சஞ் சிறப்பே யைய மெதிர்மறை-முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்-றப்பா லெட்டே யும்மைச் சொல்லே' (தொல். சொல். இடை. 7) என்ற இடையியற்சூத்திரத்தில் உம்மையின் வினைமுற்றுப்பொருளை ஆசிரியர் ஏன் கூறவில்லையெனின், 'அவைதாம்-புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும் – வினை செயன் மருங்கிற் காலமொடு வருநவும் – வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவு - மசைநிலைக் கிளவி யாகி வருநவு – மிசை நிறைக்கிளவி யாகி வருநவுந் – தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவு – மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென் – றப்பண் பினவே நுவலுங் காலை' (தொல். சொல். இடை. 2) என்ற சூத்திரத்திற் கூறப்பட்ட எழுவகை இடைச்சொற்களிற் சாரியைகளைப்பற்றி எழுத்ததிகாரத்திலும், வினை விகுதிகளைப்பற்றி வினையியலினும், வேற்றுமையுருபுகளைப்பற்றி வேற் றுமையியல், வேற்றுமைமயங்கியல் இவ்விரண்டினும் கூறப்பட்டமையின் ஏனைய நால்வகையான இடைச்சொற்களின் பொருளைமாத்திரம் இடை யியலிற் கூறினர் என அறிக. இஃது 'இடைச்சொ லேழனுள்ளும் முதனின்ற மூன்றும் மேலே யுணர்த்தப்பட்டமையான் முன்வைத்தார்' என்ற சேனாவரையர்வாக்கியத்தானும் விளங்கும். 'எச்சஞ் சிறப்பே...' (தொல். சொல். இடை. 7) என்ற சூத்திரத்தில் தத்தங்குறிப்பாற் பொருள்செய்யும் உம்மையின்பொருளைக் கூறினர் என்பது வெளிப் படை.

'உம்மூர் தாகு மிடனுமா ருண்டே' (தொல். சொல். இடை 44) என்ற சூத்திரம் பெயரெச்சமாகிய செய்யும் என்ற வாய்பாட்டவாகிய சொற்களையே உணர்த்திற்று என்று ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறிற்றிலர்; உரையாசிரியரும் கூறிற்றிலர். அவ்வாறு ஆசிரியர்க்குக் கருத்தாயின் பெயரெச்சத்திற்கேயுரிய ஈறாகிய உம்மின் உகரம் தானேறிய மெய்யுடன் கெடுமென்று விதிக்கும் 'அவற்றுள்—செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு—மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகா—மவ்விட னறித லென்மனார் புலவர்' (தொல் சொல். வினை. 41) என்ற சூத்திரத்தின்பின்னர் இச்சூத்திரத்தையுங் கூறியிருப்பர். அன்றியும், உரையாசிரியர் இச்சூத்திரத்திற்கு உதாரணமாக முற்றுவினைகொண்ட 'நீர்க்கோழி கூஉப்பெயர்க்குந்து' (புறநா. 395) என்பதனையே உதாரணமாகக் காட்டினர். இதனையே சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் காட்டுவதுடன் மற்றோர் உதாரணத்தையுங் காட்டினர். அம்மூவரும் அவ்வுதாரணத்துள்ள 'கூஉப்பெயர்க்குந்து' என்பது முற்றுவினை யென்று அறியாதவர்கள் என்று கூறுவது இயலாததாகும். அவ்வாறாயின் 'இடனு மாருண்டே யென்றது, இத்திரிபு பெயரெச்சத்திற்கேயுரியவழி யென்பது கருதிப்போலும்' என்று சேனாவரையத்திலும், 'இடனு மாருண்டே என்றதனான் இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க' என்று நச்சினார்க்கினியத்திலும் உள்ளவாக்கியங்கள் எவ்வாறு பொருந்துமெனின், அவை நன்னூல்படித்த ஒருவரால் ஏட்டிற் பின்னர்ச் சேர்க்கப்பட்டிருத்தல்வேண்டும். அவ்வாறு வேறெங்கேனும் சேர்க்கப்பட்டுளவோ எனின், பல இடங்களில் உள்ளன என்பது இப்போது வெளிவந்துள்ள தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பில் காரணங்களுடன் என்னாற் கூறப்பட்டது காண்க.

ஆதலின் புறநானூற்றின் ஒருபகுதியின் பழைமைக்கு என் நண்பர் வேறு சிறப்புக் காரணங்கள் கண்டு கூறுவாராக.

P. S. சுப்பிரமணியசாஸ்திரி.

ஸ்ரீ:

# உதரக்கிரியை.

[உதரக்கிரியை யென்பது வயிற்றிலுண்டாகும் நோய்களின் விவரமும் அவற்றை அறிதற்கான குணங் குறிகளும் அவற்றுக்குச் செய்யும் சிகிச்சைகளும் விளங்க எளிய விருத்தச்செய்யுள்களால் அகத்தியர் வைத்யத்தின்வழி நூலாக இயற்றப்பட்டதென்று தெரிகிறது. இதனை இயற்றியவர் பெயர் முதலிய் விவரம் ஒன்றும் தெரியவில்லை. இந்நூலின் ஏட்டுச்சுவடியொன்று மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையிலுள்ளது. அது வயிற்றிலுண்டாகும் நோய்களிற் சற்றேறக்குறைய 75-க்கு ஏதுவும் குணம் குறிகளும் மட்டும் கூறும் குறைப்பிரதியாயிருக்கிறது. ஆயினும் நாளடைவில் சிதல் முதலியவற்றால் அழிந்தொழியாது பாதுகாக்கக்கருதி ஏட்டிலிருந்தபடியே அது இங்கே வெளியிடப்பட்டுளது. முழுதும் உள்ள பிரதிகளுடையார் கொடுத்துதவுவார்களாயின் பரிசோதித்துப் புத்தகமாக வெளியிடலாகும்.

உதவிப்பத்திராதிபர்.]

[நூல்வரலாறு.]

1 ஆதியங்கடவுளானையடியிணைபணிந்துபோற்றித்
தீதறுவியாதிதன்னைத்தெளிவுடனறியவேண்டிச்
சோதிசேர்முனிவன்கூறுங்குணங்தொகுபாடல்தன்னை
நீதிசேர்படியின்மீதேநிகழ்த்தினார்முன்னோர்தாமே.

2 உதரமதனிலுறுநோயின்பெயருமதுசெய்குணவேக
விதமுமதுசெய்குறிசோர்வுதெளிவுமிவைகள்முதலாகு
..........................................................
விதியையுலகிலவர்கூறவினவியுரைசெய்ததுவாமே.

3 அதிகமுனிவரொருநால்வரறியவரனுயுள்வேத
முதியமொழியைவடநூலதனின்மொழியவுணர்வாய்மை
..........................பொதியமலையின்முனிகூறு
முதரகிரியையறியாதார்மற்றோர்கிரியையறியாரே,

# நூல்.

4 மருவியவுதரந்தன்னில்வைகும்நோயொருநூற்றெட்டிற்
பெரியவருரைத்தவுண்மைத்தொந்தமூமொன்பான்பேசி
லரியதாம்சாத்தியங்களசாத்தியமவுடதங்கள்
கருதியகுறிகுணங்களேதுவுங்கண்டுகொள்ளே.

5 அனிலத்தால்வந்தநோய்களைம்பத்தாறுமென்க
தனிவருபித்தந்தன்னூற்றுறொருமுப்பதென்க
கனிவுறுகபங்கள்தன்னிற்கலந்திருபத்திரண்டா
மெனுமிவைமுறையதென்னவிறையவனருளிச்செய்தான்.

6 உதரத்தில்வாதபித்தசிலேற்பனமூன்றினாலுங்
கதியுறுதொந்தத்தாலுங்கருதுநோயொருநூற்றெட்டு
மதியுறுகிரியைதானுமருந்துசாத்தியமசாத்தியம்
விதியுறுநோவுசேருமேதுவும்விளம்பக்கேளே.

7 கருதிடுமீனின்முள்.............................................
மருவியகல்லெலும்பான்மங்கையர்மருத்தினீட்டாற்
பருகுசோறருமையாலும்பழமலம்நிற்கையாலும்
பெருகவுண்டோடலாலும்பெருத்திடும்வயிற்றினோவே.

8 புரையறவுண்ணலாலும்பொருமநீர்கொள்ளலாலும்
ஊருளவேமடக்கிக்கொண்டுசுகம்பெறக்கிடக்கையாலும்
மருவியமேடுதாழ்வுமதமுறநடக்கையாலுந்
தெரிவுறுரோமத்தாலுஞ்சேர்ந்திடும்வயிற்றினோவே.

9 புசித்தபோதருந்தாதாலும்பசியில்லாதருந்தலாலு
நசித்திடுலகிரியாலுநாரியர்வருத்தத்தாலு
மிசைத்திடுவாதபித்தசேற்பனமிவைமூன்றெல்லை
திசைப்படுதொந்தத்தாலுஞ்சேர்ந்திடும்வயிற்றினோவே.

10 சொல்லியவுதரந்தன்னிற்றோன்றியவியாதிப்பேரும்
நல்தோர்குணங்கள்சாத்தியமசாத்தியம்நவில்மருந்து
மல்லியங்கோதைநல்லாயறிவொடிவ்வாறுசெய்கை
வல்லவருரைத்தவுண்மைவாகடம்நவிலுவோர்க்கே,

## குன்மம்.

[உதரதோஷத்திற் குன்மமெட்டுக்கும் பெயர்:—வாதகுன்மம், பித்த குன்மம், சிலேற்பனகுன்மம், எரிகுன்மம், சத்திகுன்மம், மூலகுன்மம், வலிகுன்மம், குன்மசூரை (ஆக அ). இதிற் சாத்தியம் ச. அசாத்தியம் ச. பித்தகுன்மம், சிலேற்பனகுன்மம், எரிகுன்மம், குன்மசூரை இந்த நாலும் சாத்தியம். தீரும். வாதகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், மூலகுன்மம் இந்த நாலும் அசாத்தியம். தீரா.]

11 வகைப்படுகுன்மமெட்டின்பேர்சொல்லில்வாதகுன்மந்
தொகைப்படுபித்தகுன்மந்தோன்றிபசேற்பகுன்ம
மிகைப்படவெரிக்குன்குன்மம்வேறுளசத்திகுன்மம்
வகைப்படுமூலகுன்மம்வலிகுன்மங்குன்மசூரை.

12 உரைத்திடுபித்தகுன்மஞ்சிலேற்பனகுன்மத்தோடே
யெரித்திடுங்குன்மங்குன்மசூரைபோடிரண்டும்
பரித்திடுசாத்தியங்கள்பகர்ந்திடுவாதகுன்மம்
வருத்திடுசத்திகுன்மம்வலிகுன்மமூலகுன்மம்.

### சாத்தியம் ச-ல் பித்த குன்மம்.

13 ஓதியகுன்மநாலுமசாத்தியமுணர்ந்துகொண்டா
லீதுசெய்குறிகுணத்தையிம்பக்கேள்பித்தகுன்மந்
தீதுறுசாத்தினாலேதேகமும்வரண்டுநாளு
மூதையுண்டாகிமூலத்துளமலமூலநுங்காணே.

14 மலமதுலர்ந்துவாயுவுண்டாயாகம்வற்றிநெஞ்செரிக்குங்
குலவுமசனங்கொண்டக்காற்குடலுட்பொருமிப்புளித்தேக்கா
யுலையும்புண்போல்நாற்றமுண்டாயுழலைமிகுந்துவலியுண்டாம்
நிலையங்கெடவேமந்திக்கும்பித்தகுன்மமெனநிகழ்த்தே.

15 தேகம்வரண்டுதாகமுண்டாம்நிராளும்வாயுக்குலைமீது
நோகுந்துயருமிகுந்திருக்கும்நோக்கங்கெட்டுமஞ்சணிக்கு
மோகைமிகுந்துவாய்நீருமூறிப்பொருமிவாந்திக்குந்
தோகையனையாய்கூறக்கேள்தோன்றும்பித்தகுன்மமிதே.

16 பண்டுமுள்வயிற்றைப்பற்றிப்பலபடவலிக்கைபாக்குந்
கொண்டுநின்றுகாரத்தைக்குமட்டியேயெடுக்கலாக்கும்

மண்டிநின்றெதிரொடுத்துவயிற்றையேவலிக்கலாக்கும்
விண்டுதான்பித்தகுன்மமிது வெனவிளம்பலாமே.

17 தலையுங்கனத்தேஓங்காரந்தானேமிகவும்வாயூறி
நிலையுங்கெடவேகிறுகிறுத்து நின்றேவேர்த்து நெஞ்செரிக்குங்
குலேபுள்வலிக்குமேலேப்பங்கொண்டேபொருமிமந்திக்குங்
குலையுஞ்செய்யும்பித்தகுன்மமெனவேபெரியோர்கூறினரே.

சிலேற்பனகுன்மம்.

18 ஒண்டொடிகேளாய்வாய்நீரூறியேவழுவழுக்குந்
தொண்டைநொந்திருமலுண்டாம் துடியெனவடிக்கும்நெஞ்சு
கொண்டிடுமசனம்நின்றே குழம்பியேவாந்திசெய்பு
மிண்டிடவயிற்றைப்பற்றிவலித்திடும்விளம்பக்கேளே.

19 கரித்திடும்நெஞ்சுகாந்துங்கவ்விடுங்குலையைப்பற்றி
யெரித்திடுமுடம்புவேர்க்குமிடருறவயிற்றினேவாம்
பொருத்துறுமசைவையெல்லாம்புண்படக்குத்திநோவாம்
வரிக்கயல்விழியாய்சேற்பகுன்மத்தின்வகையிதாமே.

எரிகுன்மம்.

20 வயிற்றையெரித்துக்குடல்குமட்டிவாய்நீர்பெருத்துத்தலைகனத்தே
யுயிர்ப்பையழியக்கிறுகிறுத்தேயோங்காரித்தேபபுழுமிகுந்து
மயிர்க்கால்வழியேவெயர்த்தலும்பிவயிறுபொருமிமந்திக்கு
மியற்றியெரிக்குங்குன்மமெனவிறையோன்சொன்னகுறியாமே.

குன்மசூரை.

21 சாலவேயுதரந்தன்னிற்றப்பளேபோற்றிரண்டே
யேலவேயுடம்புவற்றியிடுப்புசந்திரையும்வாயுக்
காலெலாமிகவேயோயுங்கருதிடுமன்னஞ்செல்லா
கோலமாங்குழலிஞளேசூரைபாங்குன்மமாமே.

அசாத்தியம் ௪-ல் வாதகுன்மம்.

22 உடம்புகால்குத்திநொந்தேயூதைபுமிகுந்துவிம்மு
நுடங்கிடைமின்னேயீரல்துனியிடைதிரண்டுநோவாம்
விடம்படவிலாவிரண்டும்வேறுவேதனையாய்நோகுந்
திடம்படவாதகுன்மம்செய்குறியென்றுசெப்பே.

23 ஈரலுநெஞ்சும்பற்றியெரித்திடுமூளையும்பக்கக்
காச்செறிகபாலந்தானுங்கனத்துமேபுரட்டிச்சத்தி
நேர்படக்கிறுகிறுத்துநினைவறக்குடர்வலிக்கில்
வார்பொதிமுலையினுளேவாதமாங்குன்மமாமே.

## சத்திகுன்மம்.

24 நெஞ்சுமெரித்துப்புளித்தேக்காய்நின்றேயுதரம் பொருமலுமாய்த்
தஞ்சமறவேசத்தியுமாய்த்தாகத்துயரால்மலந்தீயு
மஞ்சட்பித்தவாயுவதுமதிகப்பட்டுப்பகைத்ததெனில்
தஞ்சமற்றசத்திகுன்மந்தானேசெய்யுங்குணமாமே.

25 சோறுசெரிக்கில்வயிறதுநோந்தொடர்ந்துவாய்நீரூறிவரு
மேறுஞ்சத்திவருமாபோலிருக்குமெடாதுநெஞ்செரிக்கும்
வேறுதுரும்பிட்டெடுத்..................முடல்வற்றுந்
தேறுஞ்சத்திகுன்மத்தின்செய்கையென்னச்செப்பினரே.

## மூலகுன்மம்.

26 திரளும்வாயுக்குலைமீதுசிக்குமலமுமுடம்பெங்கு
மூளையுங்குற்றுமுதரத்துளுன்றுங்கருவிமுனைபோலப்
புரளும்வாய்நீரூறிமிகப்பொங்குமேப்பம்புலால்நாறும்
வாளுமுடம்புமிக்குணங்கள்மூலகுன்மவகையாமே.

## வலிகுன்மம்.

27 பண்டுமுள்பழமலத்திற்பத்தியஞ்சேர்தலாலும்
கொண்டுதான்கஞ்சிதண்ணீர்கொதிப்புடன்வெதுப்பினாலு
மண்டியேகாயம்வற்றிமயங்கெடவுலர்த்தலாலும்
வண்டுசேர்குழலினுளேவலிகுன்மமாகுமென்னே.

28 வந்தேயுதரம்பொருமலுமாய்வயிறுவலிக்குமந்திக்கும்
நொந்தேயுடம்புகிறுகிறுத்துநோக்கங்கெட்டுத்துயரமிகும்
தந்தால்மருந்துதனைமீறுந்தாகந்துயரால்மலந்தீயும்
வெந்தேவிழுந்துபோமளவும்விடாதேபம்மாவலிகுன்மம்.

## வேறு நோய்கள்.

29 தேசிகமுனிவன்கூறுமுதாநோய்ச்செய்கைதன்னிற்
பேசியசோகைபாண்டுவிஷபாகம்பின்னுங்கேளாய்
மூசநீராமையோடுபோராமையுங்காமாலை
காசணிமுலையாயாறுரோகமுங்கிரியைகாணே.

## சோகை.

30 காணுநீவாதம்பித்தங்கபஞ்சுரஞ்சன்னிரத்தங்
காணுநீசோகமாறுங்கருதிடிற்பெரியதாகுங்
காணுநீசோகமாறிற்சாத்தியமசாத்தியங்கள்
காணுநீவாதஞ்சேற்பஞ்சன்னிமூன்றசாத்தியங்காணே.

31 சாற்றிடும்பித்தசோகம்சுரசோகம்ரத்தசோக
மேத்தியரோகமூன்றுஞ்சாத்தியமென்றுகொள்க
பார்த்திடிற்குணங்கள்செய்புங்கிரியைகள்பகர்மருந்து
மூத்தவர்மொழிந்தநீதிமுறைமையையறிந்திடாயே.

## அசாத்தியமூன்றில் வாதசோகை.

32 தேகமுந்தூலமாகிக்கருமைதோய்ந்திருமலெய்தி
ஆகமுமகன்றுகாட்டிமுகத்தொடுவயிறதைத்துத்
தாகமும்பசியுமின்றிமலஞ்சிக்கித்தலைசுழன்று
மோகமாய்வீங்கும்வாதசோகத்தின்முறையிதாமே.

33 கண்ணுமுகமும்பல்நாவுங்கையுங்காலுங்கருதுகிறும்
நண்ணுமலமுஞ்சலமுமொன்பான்கருமைநிறமாமதுநாடில்
மண்ணில்நடக்கிற்கிறுகிறுத்துமதர்த்துத்தடித்துவயிறதைக்குந்
திண்ணமிதுவேவாதநோய்சேருஞ்சோகமிதுவென்னே.

## சிலேற்பனசோகை.

34 சூக்குமதேகமாகியிளைப்பொடுஇரைப்புமுண்டாய்
ஊக்கமேயின்றிக்கைகாலோய்ந்துநெட்டுயிர்ப்புமுண்டாம்
வீக்கமாம்வயிறுகைகால்குளிர்ந்திடும்வேர்வையாகுந்
தாக்கியசிலேற்பசோகைதான்செய்புங்குணங்கள்தாமே.

35 மயங்கிடுமுதரம்விம்முமன்னமுமறுத்துக்காட்டும்
நயம்பெறவெளுக்குமேனிநாவழுவழுத்திருக்கும்
பயங்கொள்மேலிளைப்புவிக்கல்பாதாபமோகம்பற்றுந்
தியங்கியசேற்பசோகைசெய்குணமென்றுசெப்பே.

தோந்தசோகை.

36 மந்தமேபற்றுங்கைகால்வயிறதைத்திளைப்புமுண்டாய்
உந்தியவாதபித்தகபமுடன்கோபித்தோங்கு
மந்தமால்நிறமதாகுஞ்சுரமொடுபிரமையாகுந்
தொந்தமாஞ்சோகையென்றுசொல்லுமிக்குணங்கள்தானே.

சாத்தியமூன்றில் (மஞ்சட்) பித்தசோகை.

37 அடிவயிறதைத்துமுகமதைத்தேயகலம்வற்றிமெய்வெளிறித்
தடிதலேதிமிர்த்துக்கண்வெளுத்துத்தளர்ந்துபசியற்றுணர்ச்சிகெட்டு
மடிவாய்க்காலுமிகவோய்ந்துநாக்குமுதடுமஞ்சளதாய்
வடிவிற்காதுமடைத்தடைத்துவருங்காண்பித்தசோகையிதே

38 கையுங்காலுமுகம்வயிறுங்கண்ணும்பல்லுமலஞ்சலமுஞ்
செய்யநிறமாய்வீக்கமுறுந்தேகம்வெளுத்துக்கண்தூங்கு
மையும்பித்துங்கலந்துவருமன்னஞ்செல்லாதாக்கமுறுந்
தொய்யின்மூலையாய்பித்தமதாமஞ்சட்சோகைக்குணமாமே.

39 வயிறுமுகமுங்கனத்ததைத்துவாய்நீர்பெருத்துமஞ்சணித்தே
யயிலுமசனஞ்செறுத்துவிம்மியையும்பித்துமர்திக்கும்
மயிலின்றாக்கமதுபோலச்சற்றேசற்றேமயக்கமுமாம்
துயிலும்வாராதிக்குணங்கள்பித்தசோகையெனச்சொல்லே.

40 கண்ணுந்தூங்கிமலசலங்கள்சிவந்துகழிந்துகாந்தலுமாய்
எண்ணும்வயிறுமிகக்கனத்தேயிருந்தேயெழுந்தாற்கிறுகிறுத்து
மண்ணில்நடக்கும்போதுகைகால்தளர்ந்துவசங்கெட்டிருந்ததெ
எண்ணும்பித்தசோகமெங்றேயிதையும்பேசலாமென்றார். [னில்

41 சோகமேயெழுந்தபோதுதோன்றிடுங்குணத்தைக்கேளாய்
சோகமேயிருமலாகுமிளைப்பொடுதுசப்புமாகுஞ்
சோகமேகைகால்வீங்குந்துடியெனவடிக்குநெஞ்சு
சோகமேபாதாபத்தோடப்பிசந்தோன்றுமன்றே,

42 நாபிமேல்நெஞ்சமட்டும்கனத்திடுநாபிதோன்றும்
மேவியவிஷநீர்பாய்ந்தேமேலதிசாரமாகும்
பாவையேநாவுங்கண்ணும்பாண்டமும்வெளுத்துக்காட்டும்
ஓவியமனையாய்பித்தசோகையென்றுரைத்திடாயே.

## சுரசோகை.

43 காமிருகாலுமோயுங்கண்ணுறுத்திடுங்கால்காந்தும்
உரமுறுபலமுங்குன்றுமுணர்விலாவீக்கமாகும்
பொருமிடும்வயிறுகண்டம்புகைந்திடுமிருமலுண்டாம்
சுரமுறுசோகையென்று சொல்லுமிக்குணங்கள்தானே.

44 ஊதைமிகுந்துநாவுமுலர்ந்தோங்காரித்தேநெஞ்செரித்து
நாதமடைத்துவிழிபுகைந்துநாவுமுடம்புஞ்சிவந்திருக்கும்
பாதங்கரமுங்காந்தலுண்டாய்ப்பரதாபித்துக்கண்தூங்கும்
வேதமுனிவனுரைத்தருளுஞ்சுரசோகத்தின்விதமென்னே.

## ரத்தசோகை.

45 மயங்கிடும்வெளுக்குந்தேகமுதரமும்மந்தம்பற்றுந்
துயங்கிடும்சடம்வேராகுந்துடியெனவடிக்கும்நெஞ்சு
பயங்கொளச்சோற்றைக்கக்குமிருமலுமிளைப்பும்பற்றும்
இயம்பியவீக்கமாகுமிரத்தமாஞ்சோகைதானே.

46 வயிறுங்காலுமதைப்புண்டாம்வாய்நீர்பெருத்துமயக்கிவரும்
துயிலும்வாராதிருமலுடன்துரப்புமிளைப்பும்வாந்தியுமாம்
அயிலுமுணவுமறுக்குந்தாதறவேகட்டமாகுமிது
குயின்மென்மொழியாபாத்தமாஞ்சோகைசெய்யுங்குணமாமே.

## சோகைகளின்நிறம்.

47 வாதசோகைகருமையதாம்பித்தசோகைமஞ்சணிக்கும்
ஓதுஞ்சேற்பசோகைவெள்ளையுறுமேசுரமாஞ்சோகையது
மாதேசெம்மைநிறமாகுஞ்சன்னிச்சோகைமாநிறமாம்
ஓதுமுதிரசோகைபுகர்நிறமாமென்றேயோதினரே.

## பாண்டு.

### வாதபாண்டு.

48 கையுங்காலுங்கடுத்துளையுங்கருதுமுகங்கண்வயிறதைக்கும்
மெய்யுந்தளர்ந்துவெளுத்திருக்கும்வெண்ணிநுரையாய்வயிறழியும்
ஐயுங்கோபித்திளைப்புண்டாயன்னஞ்சிறுத்துவாந்திசெயும்
உய்யும்வாதபாண்டுவெனவுரைத்தார்பெரியோருரைத்தாரே.

49 மந்தம்பற்றுமுதரத்துள்வாய்நீர்பெருத்துவாந்திசெயும்
சந்துதாழுமொளிபெருத்துத்தளர்ந்துகுத்திக்கடுத்துளையும்
முந்துமுகத்துமதைப்புண்டாம்முச்சோடிளைப்பும்விக்கலுமாம்
இந்தக்குணங்களிருந்தனவேல்வாதபாண்டுவெனவோதே.

### பித்தபாண்டு.

50 இருமலெய்ப்பிளைப்புநெஞ்சிலிடிப்பதுமிகவுமுண்டாம்
பெருகவேநடக்கும்போதுபேச்சுமுட்டதுவேயாகும்
வெருவுறக்கிறுகிறுக்கும்மேனியும்வெளுத்ததைக்கும்
பெருகிடும்பித்தபாண்டிக்குணமெனப்பேசலாமே.

51 உதரமேயதைத்துக்கைகாலோய்ந்துடன்சுரந்துநோவாய்ப்
புதையவேவீங்குங்கண்ணும்பூருபூரெனவிளைக்கும்
பதகரமதிலுமிஞ்சிச்சொறிவதாயசடுபற்றும்
இதமுறுகுணங்கள்பித்தபாண்டுவாமெனவிளம்பே.

### சிலேற்பனபாண்டு.

52 மெய்யேவெளுக்கும்வயிறதைக்கும்வீங்கும்புறங்கால்புறங்கைகள்
கைகாலோயுங்கிறுகிறுக்கும்கண்ணும்முகமும்பஞ்சார்க்கும்
அய்தாய்மலநீரளைந்துவிழுந்தொண்டைசிறுத்துத்தாப்புமிகும்
ஐயேகக்குமிக்குணங்கள்சேற்பபாண்டுவாகுமின்னே.

53 வேர்த்துவெதும்புக்கண்குளிரும்வெச்சென்றிருக்கும்விலாவுநெஞ்சு
மார்த்துத்துடிபோலடிக்குமிகவையும்பித்துங்கலந்துவருந்
தீர்க்கமின்றிமடியுண்டாம்தித்தித்திடுநாவழுவழுக்கும்
பார்த்தாலுடம்புவீக்கமுறுஞ்சேற்பபாண்டுவெனப்பகரே.

### சுரபாண்டு.

54 காயுமுடம்பிலெப்போதுங்கண்ணுந்தூங்கிக்கிறுகிறெனும்
வாயுவுடம்பில்விடம்போலவாங்கும்பொசிக்கமாட்டாது
சாயுங்காலமிருமலுறமூதாம்விம்மூந்தாகமிரும்
பாயுநீருஞ்சுடுமலமும்பசலைநிறமாஞ்சுரபாண்டு.

55 காமூமுகமும்பல்நாவுங்காலுமுயிருமலநீரும்
விரவும்பசலைநிறமாகும்வெதும்புஞ்சென்னிகிறுகிறுக்கும்
உரமுங்குன்றுமூளையுறுமோங்காரித்துநெஞ்செரிக்குஞ்
சுரமேன்மேலுமாறாதுதோன்றுஞ்சுரத்திற்பாண்டுவிதே.

### இரத்தபாண்டு.

56 சுரத்தினிற்பித்தந்தோன்றியுதிரமேசொரிந்துசக்கும்
நெரித்திடும்புருவமுச்சியிடித்திடுங்கெட்டையுண்டாம்
காத்தொடுகாலுமோயுங்கண்முகம்புதையவீங்கும்
இரத்தமாம்பாண்டுசெய்யுங்குணமெனவியம்பிடாயே.

57 வாய்நீர்சுழற்றிநெஞ்செரிக்கும்மலமுஞ்சலமுஞ்சிவந்திருக்குந்
தேனீப்போலமிடறிரையுஞ்சில்லென்றடைக்குமிருகாதும்
ஊனேயுருக்குங்கபம்வீழுமோங்காரிக்குமுதிரம்விழும்
மானேகால்கள்வயிறதைக்குமிரத்தபாண்டுக்குணமாமே.

### மூலபாண்டு.

58 கால்கையோய்ந்துடல்காய்ந்துவெளுத்துகிர்
சாலநோம்வலிதாதுகுறைந்திடும்
தூலமேல்கொண்டசனஞ்சுருங்கிடும்
மூலபாண்டுவிதென்னமொழியலாம்,

59 ஊதைவிம்மியுதரமும்வீங்கிடும்
பாதநீள்குறங்கைப்பற்றிவரங்கிடுந்
தாதுநாசமதாய்மலந்தங்கிடுங்
கோதில்மூலத்திற்பாண்டுகுணங்களே.

### சன்னி(வாத)பாண்டு.

60 ஓதியவாதபித்தசேற்பனங்கோபித்தோங்கும்
ஊதையும்மிகுந்துவிம்மியுதரமுங்காலும்வீங்கும்

பேதமாயிளைக்கும்விக்கல்வாந்தியும்பிரமைதாகங்
கோதையேசன்னிவாதபாண்டுவின்குணமிதாமே.

61 கண்ணுந்தூங்கிமுகமதைத்துக்கைகாலோய்ந்துகிறுகிறுத்தே
உண்ணுமசனஞ்செறுத்துவிம்மியோங்காரித்துநெஞ்செரிக்கும்
தண்ணீர்வேட்கும்நாவறளுந்தாகமோகப்பிரமையுமாம்
பெண்ணேகேளாயிக்குணங்கள்சன்னிபாண்டுக்குணமாமே.

## விஷபாகம்.

62 கண்ணுந்தூங்கிமஞ்சணிக்குங்கைகால்வயிறுமிகக்கனக்கும்
உண்ணுமசனஞ்செறுத்துவிம்முமூதைமிகுந்துவாதைசெயுந்
துண்ணென்றிருக்குமோர்புறத்திலோர்பால்வற்றுந்துரப்புமிகுந்
தண்ணீர்வேட்குமிக்குணங்கள்விஷபாகத்தின்குறிதானே.

63 வீங்கும்வற்றுமொருபக்கம்மேனிவறண்டுவெளுப்பேறுந்
தூங்குங்கண்ணுமேல்மூச்சாஞ்சுவையிற்புளியேமிகவிரும்பும்
வாங்கும்பொசிக்கமாட்டாதேவாயுவுடம்பில்விடம்போலாம்
ஏங்கிக்கொல்லும்விடபாகமிதுவேசெய்யுங்குறியாமே.

## நீராமை

64 நாபிமேல்நெஞ்சுமட்டுநடுவுறுவாயுப்போலச்
சோபமாய்மிகவலிக்குஞ்சோர்ந்திடுங்கண்கள்தாழும்
தாபமேயன்றிநிற்குந்தன்னுடல்கொள்ளாதன்னங்
கோபமாய்மிகவலிக்குங்கூறுநீராமையென்றே.

65 உடம்பதுலர்ந்துள்ளிருமலுண்டாயுதரம்வீங்கிநாவறண்டு
தடங்கண்வெளுத்துப்புறங்காலுந்தடித்துவீங்கித்தாகமுமாய்
அடர்ந்தேமூச்சுத்தொடர்ந்தோடுமனந்தல்மிகவும்உண்டாக்கும்
மடந்தாய்சொன்னேநீராமைவருத்துங்குணங்களிவையாமே.

## நீராம்பல்.

66 மார்பின்கீழ்வயிறும்தாளும்வகைபடவீக்கமாகும்
நேருற்றகாயம்வற்றிநிறமதுவெளுத்துநாவும்
நீர்வற்றித்தண்ணீர்தேடும்நினைவுற்றுப்பலவுங்கேட்கும்
வாருற்றமுலையாய்சொன்னேம்வயிற்றுநீராம்பல்தானே.

## பேராமை.

67 மோதிடுமுதரம்விம்முமுளைந்திடுமூதைமேன்மேற்
பேதமாய்மேல்மூச்செய்தும்பெருகிடுமிளைப்புத்தாகம்
வாதையாயேங்கிவீங்கிச்சலமலமடைத்துக்கொள்ளும்
பேதமேசெய்யுமீளாப்பேராமையென்னலாமே.

68 வீங்குஞ்சலமுமிகக்கோக்குமிகுந்தேபொருமுமுடம்பெங்குந்
தூங்குங்கண்ணுமேன்மூச்சுத்துயரமிகுந்துதாகிக்கும்
வாங்குமுதகந்தனைத்தேடுமறுகித்துயரமிகுந்திருக்கும்
ஏங்குமிகவேபேராமைசெய்யுங்குணங்களிவையாமே.

## காமாலை.

### வறட்காமாலை.

69 முகமும்வீங்கிக்கண்வெளுத்துமூச்சுநடக்கில்முட்டதுவாய்
அகமுந்துடித்துநாவறண்டேயணுகுந்தாதுகெட்டிருக்கும்
மிகவுமசனஞ்செரியாதுமேனிவரண்டுவெளுப்பேறுஞ்
செகமேற்சொன்னோங்காமாலைசெய்யுங்குணங்களிவையாமே.

### வாலகாமாலை.

70 கரிமண்சாம்பலிவைதின்னுங்கண்ணுமுகமும்வெளுத்ததைக்கும்
இரியவிலாவுமிளைப்புண்டாமிருகால்முட்டுக்கடுத்தோயும்
பொருமும்வயிறுநெஞ்சிடிக்கும்போதத்தின்னுங்கண்புதையும்
மருவுமிவையேவாலகாமாலைசெய்யுங்குணமானே.

### ஊதுகாமாலை.

71 பொருமிடுமுடம்பெண்சாணும்பொருத்துக்கடோறும்நோவாய்
இருவிலாநெரியவாங்கியிளைத்திடுமூதைவிம்முங்
கருத்துநாத்தடித்துப்பேசுங்கபமிகுந்திருமலுண்டாம்
வரிவிழிமுகமும்வீங்குமூதுகாமாலைமானே.

### மஞ்சட்காமாலை.

72 கண்முகமலசலங்கள்கருத்துநாவுதரங்கைகால்
திண்ணமாமூருமொக்கப்பசலமேசேர்ந்துகாட்டும்
உண்ணும்நீர்த்தாகம்பற்றியுதரத்துளூதைவிம்மும்
விண்ணிடைசுழலுமேனிமஞ்சட்காமாலைமின்னே.

## கருங்காமாலை.

73 அவயவங்கறுத்துக்காட்டும் அயர்வொடுமயக்கம்வேர்வை
கபமுறவிளைக்குங்கைகால்குளிர்ந்திடுநெஞ்சிற்காயுஞ்
சுவையுறுமெண்ணெய்நெய்பாலினிப்பினால்தொந்தமாகும்
இவையெலாங்கருங்காமாலைக்குணமெனவியம்பலாமே.

## மகோதரம்.

74 தும்பியாற்றேரையாலுஞ்சுனைகளிற்றண்ணீராலுங்
கம்பினெல்லுமியினாலுங்கறிமுள்ளோடெலும்பினாலும்
பம்புகற்சோற்றினாலும்பகருகிர்மயிர்களாலும்
வம்பிலேவயிற்றிற்சேர்ந்துமகோதரவியாதியாமே.

75 கம்பினுமியால்நெல்லுமியாற்கறிமுள்ளெலும்பால்மயிரதனால்
அம்புகரடிதிறந்தமையால்அரணையட்டைபுகுந்தமையால்
தும்பிதேரையிடுநீரால்தோடஞ்செறிந்தசுனைநீரால்
வம்பார்தோகையிடுமருந்தால்மகோதரந்தான்வந்திடுமே.

76 மகோதரமானபோதுவாயுவும்நேரேயோடும்
மகோதரமானபோதுவாடியேயூதிக்கொள்ளும்
மகோதரமானபோதுவயிற்றடிபுறங்கால்வீங்கும்
மகோதரமானபோதுவந்திடுங்குணங்களாமே.

77 வாண்டுகண்சிவந்துகொள்ளும்வாயுவும்பொருமிக்காட்டுந்
திரண்டிடுந்தலையைப்பற்றிச்செருகிடும்புதையவீங்குங்
கரங்கழல்தடித்துமெத்தக்கனத்திடும்விம்மிக்கொள்ளுந்
தெரிந்திடுங்குணங்கள்கண்டால்மகோதரமென்னச்செப்பே.

78 சாலவேகையுங்காலுஞ்சடக்கெனவீங்கிக்கொள்ளும்
மேல்வயிறதைத்துவீங்கிமெய்யெலாம்வெளுத்துக்காட்டும்
ஏலவேமலசலங்கள்சிவந்திடுமெரித்துவீழும்
சாலவிக்குணங்கள்கண்டால்மகோதரமென்னச்சாற்றே.

79 வற்றிடுமலசலங்கள்மபங்கிடுஞ்சோபமாகி
நித்திரையின்றிநெஞ்சில்வாயுவுநேரோடாது
மற்றுமேமலமூங்கண்ணுமஞ்சணித்திளைப்புமுண்டா
முற்றுமிக்குணங்கள்கண்டால்மகோதரமென்பர்முன்னோர்.

80 பசியின்றிச்சோகமாகிப்பழமலங்கருகிவீழும்
அசைவுகளெல்லாநோவாயடிவயிறதைத்துக்காட்டும்
இசையவேயூதைவிம்மியிளைத்திடும்வரளும்நாவும்
வசையுறுகுணங்கள்கண்டால்மகோதரமாகுமாதே.

81 மயங்கெடவெளுக்குமேனிவாயுவுமிகுந்தூன்வற்றும்
தியங்கிடச்சத்திபண்ணுஞ்செறுத்திடும்வாயுமேன்மேல்
அயர்ந்துதாள்கைகளுந்தியண்டமும்வயிறும்வீங்கும்
வயங்கிழைமின்னேகேளாய்மகோதரமென்னலாமே.

82 அங்கமுமடைக்கவீங்கியறமெலிர்தற்பமாகி
மங்கியவுதார்தன்னில்வாயுவுஞ்சலமுங்கோத்துக்
கங்குல்சேர்நோமாறுற்கடியதோர்வாந்திபண்ணும்
மங்கலக்குழலினாளேமகோதரமென்னலாமே.

83 இருமிடுமிளைக்கும்வாந்தியெதிர்த்திடும்பொருமிக்கொள்ளும்
வெருவிடுங்கனவுகாணும்வீங்கிடும்வயிறுந்தாளும்
இருவிலாவிசியவிம்மியிரைந்திடுமூதைமேன்மேற்
கருகிநீர்மலமுஞ்செம்மூமகோதரமாகுங்காணே.

84 வடிந்திடுமோர்பால்வீங்கும்வற்றிடுமாகந்தானுந்
தடிந்திடுமூதைமேன்மேல்தடைபடத்தொடர்ந்தேயோடும்
விடிந்தபோதெழுந்தால்மேனிவிம்மிமூதிக்கொள்ளுங்
கடிந்திடுமகோதரத்தின்கணக்கிவைகண்டுகொள்ளே.

85 மேவியமலசலங்கள்விடாமையுமிளைப்பினோடு
பாவியசுரமுமூச்சுப்பற்றறுக்குணமுமாகிக்
கோபமாய்மிகவும்வீங்கிக்குறைத்திடுங்குறிகள்கண்டாற்
சாவதேதிண்ணமென்னச்சாற்றுதிவிரைவின்மாதே.

86 மலமொடுசலமுமுண்டாய்வாயுவுங்கீழேநோக்கிக்
குலவியவயிறுதானுங்குழைந்துதாழ்ந்திருக்குமாகிற்
பெலமுளமருந்துதானும்பேசியகிரியைதானும்
நலமுறச்செய்கவென்றுநாகமாமுனிவன்சொன்னான்.

87 பேசியமலசலங்கள்கழிச்சலும்பெருத்தவீக்கம்
வீசியவிடங்கள்தாழ்ந்து குழைதலும்வினுவிக்கண்டாற்
கூசிடவேண்டாமிந்தக்குறிகளுண்டானபோதே
மாசிலானருளைக்கொண்டேமருந்துசெய்யறிந்து தானே.

## பெருவயிறு.

88 கருவியும்மந்தம்பற்றிக்காயமேலுடம்புவற்றிப்
பெருகியவுதாரந்தானும்பெருகிடப்பொருமிவிம்மி
மருவியவுணவுமாறிமலத்தையும்பரிப்பதென்னிற்
பெருகியவுதரதோஷம்பெருவயிறென்னலாமே.

89 சலமலஞ்சிக்கிக்காட்டித்தாகதாபங்களாகிப்
பலபடமயக்கமாகிப்பழஞ்சுரமாறுநின்றே
குலவியவயிறுவிம்மியவயவங்குழைந்துகாட்டிப்
பெலமது குறைந்துதுங்கும்பெருவயிறென்னலாமே,

## வாயு.

## அதுவை.

90 கல்லெனவீரலோடேகனத்திடும்புடைத்துக்காட்டும்
புல்லியஅசனந்தானுங் குறைந்திடும்பொருமலாகும்
பல்பலவலியேயாகும்பசியின்றிமந்தம்பற்றும்
வல்லியேமலமூந்தீயுமதுவையாம்வாயுவாமே.

91 மேனிவரண்டேயுதரத்துட்கனத்து வீங்கிமெய்வெளுத்து
வாய்நீர்சுழற்றிநெஞ்செரித்துக்கண்ணும்முகமும்வாண்டுலர்ந்தே
யூனேயுருக்குஞ்சுரமாகக்கனக்கும்வயிறுமதுகண்டால்
மானேயதுவைவாயுவிதுமண்ணோறியச்சொன்னோமே,

## கவிகை,

92 ஈரவிற்கனத்தேயுந்தியிருமிலாப்புதையவிம்மிக்
கூரியவூதைமூலத்துள்ளிலுங்குறுகுறென்னும்
சீரியவசனந்தானுஞ்செறுத்திடும்வலியேயாகும்
மார்பதுகுழிந்துகாட்டும்கவிகையாம்வாயுவாமே.

## பீலிகை.

93 மலத்தையிறுக்குமந்தித்துவலுவாயுதாந்தனிற்புரண்டு
பெலத்தைக்கெடுக்குமீரலொடும்பெருகக்கனத்துத்திரண்டேறும்
உலர்த்துமசனஞ்செல்லாமலோங்காரித்தேப்பமுமுண்டாம்
குலத்திற்பெரியபீலிகையின்குணத்தைப்பேசுங்குறியாமே.

94 காலுடனுதாம்விம்மியீரலுங்கனத்துக்காட்டி
மேலதுவெளுவெளுத்தேயூதையுமிகுந்துவிம்மிச்
சாலவேசெல்லாதன்னந்தாகமேலேப்பமுண்டாம்
பீலிகைவாயுவென்றேபேசலாம்பேசலாமே.

## கேண்டை.

95 சுரத்திடைநின்றநீராற்சூழலிற்சீதநீரால்
வருத்தியசுரத்தினாலேயூதையால்மந்தத்தாலே
பரித்துறுமசீரணத்தாற்பசியினாற்றிரிதோஷத்தாற்
பெருத்தெழுமீரலூடேகெண்டைநோயென்றுபேசே.

96 இருவிலாநரம்புதோன்றியீரலோர்பக்கந்தன்னிற்
பொருமியேகொழுப்போல்நின்றுவலித்திடும்புளித்தேக்காகி
மருவியவசனந்தானுமறுத்திடுமாகம்வற்றும்
பெரியவருரைத்தகெண்டைநோயெனப்பேசலாமே.

## குண்டலிவாயு.

97 கண்டிக்குமுதரந்தன்னிற்கத்திடுங்கூப்பிட்டோடும்
உண்டிசெய்விரும்பித்தின்னில்மேற்படுமுண்டைபோலத்
தெண்டித்துவலித்துப்பின்னைச்சினந்துடல்பரந்தடங்கிக்
கொண்டிப்பாய்க்குடலிற்குத்துங்குண்டலிவாயுவாமே.

## அத்தருவாயு.

98 பத்தியங்கொண்டபோதுபலபடமலமுந்தள்ளி
நித்தலும்புளித்தேக்கிட்டேநின்றநீர்சுடுவேபாகிச்
சத்தியுந்தளர்ந்துகாட்டித்தருகிடாப்பானம்பேசில்
அத்தனைகுணமுங்கண்டாலத்தருவாயுவாமே.

99 மண்டியேயுதரந்தன்னின்மூலவங்கியைமறைக்கும்
கொண்டதோர்காரந்தன்னைக்குமட்டியேயருமையாக்கும்
மண்டி ......லப்புளித்தெரித்தேயுடனேவாய்மலமுந்தள்ளும்
விண்டிடிலதத்தருமைவாயுவாம்விளம்பக்கேளே.

குடகரிவாயு.

100 கடைக்குடல்மூள்ளந்தண்டிற்கலந்துகையடியிற்குத்தி
யிடைப்படவலித்துப்பின்னைமிகவுமன்னுவியாலே
புடைத்துறவெரித்தழன்றுவரண்டுடல்மறுகிநோவாய்
இடப்புறமண்டியேறுமிதுகுடகரியென்றாரே.

குடல்வாயு.

101 குடலில்வலிக்குங்காலிளையுங்குமுறுமிரையுமந்திக்கும்
உடலிலடங்கியோடிநிற்குமொருபாலன்றிப்புரண்டிருக்கும்
கடலிற்றரங்கமதுபோலக்கலக்குமுடனேவாதைசெயுங்
திடலிற்பெருத்தமறல்போலச்சிதைக்குங்குடலின்வாயுவிதே.

102 உடலிடையோடிமீண்டேயுளைந்துகால்சுரந்துநொந்து
குடலிடைகூப்பிட்டோடிக்குமிறிடுங்குடலிற்றங்கும்
கடலிடைத்தரங்கம்போலக்கலக்கிடும்வாதைசெய்யும்
நடலைசெய்குடலின்வாயுக்குணமெனநவின்றார்நல்லோர்.

அக்கினிமந்தவாயு.

103 உண்டியிற்பொருமலாலும்உடல்விளைபித்தத்தாலும்
கொண்டுதான்கழிந்துதண்ணீர்க்கொதிப்புடன்வெதுப்பினாலும்
முண்டியேவெளுத்துக்காயமயக்கெடவுலர்த்தலாலுங்
கண்டுகொளங்கிமந்தவாயுவாக்காமர்மின்னே.

104 வந்துமிகுந்தேபசியெழும்பிவயிறுமழற்றிமந்திக்குஞ்
சிந்தைதனிலேநினைந்தவெலாந்தேடுங்கொள்ளவிடாதொறுக்கும்
இந்தக்குணமேயிருந்ததெனிலிதுவேயங்கிமந்தமெனச்
சந்தமறைநூல்விரித்துணர்த்துஞ்சந்தமுலைப்பூங்குழலணங்கே.

105 மலமுங்கழியுங்கிறுகிறுக்கும்வரண்டேவயிறுவலித்துளையுஞ்
சலமுமிகுந்துகழிந்திருக்குஞ்சற்றேயிரத்தமலத்தில்விழும்
பெலமுங்குறைந்துநயனமுகம்பேதப்படவேவெளுத்திருக்கும்
மலையுங்குணங்களிவைகண்டாலங்கிமந்தமெனலாமே.

# செந்தமிழ்

(வெண்பா.)

106 நீண்டு பசிமிகுந்து நின்று வயிறிளகி
வேண்டியது தின்ன விரும்புமே—மீண்டுமனம்
சந்தேக மாகத் தரியாமல் வாந்திசெயும்
மந்தாக் கினிவாயு வாம்.

## உரத்தவாயு.

107 சாலவேயுதரம்விம்மித்தறுகிடாதேப்பமுண்டாய்
மேல்வயிறது ..................................மிகவும் விம்மித்
தூலமாயுடம்புதானுந்துயர்ந்திடுமன்னஞ்செல்லா
வாலிழாயிவையுரத்தவாயுவின்குணங்களாமே.

108 கண்டிக்குமூலத்தூடேகனத்திடுங்கைகாலோயுந்
தொண்டைமட்டாகவூதைதமோதியேதூரப்பதாகுங்
கொண்டிடுமசனஞ்செல்லாதிரைத்திடுங்குடரைப்பற்றி
உண்டியைமறுத்துக்காட்டுமூரத்தவாய்வென்னலாமே.

## ஆமவாயு.

109 குறுக்கொடுமுதுகந்தண்டுகுடைவிலாவிருகைமூலம்
உறுப்புறுப்பாகம்விட்டேயுள்ளுள்ளேகுடைந்துநொந்தே
யிறுக்கிமார்பினிற்பிடித்தேயிரைத்துமேலேப்பமிட்டு
மறுப்படப்புரட்டியேறும்வளராமவாயுவாமே.

## பூரிசவாயு.

110 சித்திரமாகவோர்பாற்சேர்ந்துகீழ்வயிற்றைப்பற்றிக்
குத்திரமாகவேமேற்கொண்டுவேதனைகள்செய்யுஞ்
சத்திரங்குடைதல்போலக்குடைந்திடுந்தளர்ச்சியுண்டாம்
இத்தனைகுணங்கள்கண்டாற்பூரிசவாயுவென்னே

## குடர்வரட்சை.

111 கடுப்பொடிரத்தஞ்சிதமலங்கலந்துகழியுமதுவன்றி
படுக்குமபானங்கீழ்வயிறுகுடரைதானதைத்துச்சலங்கொக்கும்
நடுக்குஞ்சுழற்றுந்தலைவலிக்குப்பநயனமிரண்டுமஞ்சணிக்கும்
தொடுக்குமசனம்வராநிக்குங்குடர்சேர்வரட்சைக்குணமென்னே.

## தீரை.

112 உள்ளுடல்குடல்குமட்டியுருண்டுடல்திரண்டெழுந்து
மெள்ளவாய்நீர்சுழற்றிமேனியுமெலிந்துதோன்றுங்
கள்ளமாயுதரந்தன்னைக்கவ்வியேவலிக்கலாகும்
தெள்ளியமுனிவன்சொன்னதீரையின்குணமிதன்றே.

## கிருமி.

113 நலத்துடன்மலம்விடாமல்நாடொறுந்தங்கியங்கே
வலித்திடுஞ்சிறுபுழுத்தான்வளர்காயமிகக்கெடுக்கும்
நலித்திடுமபானமட்டும்நடுக்கெனவெரித்துநோவாம்
மலத்தினிற்கிருமிதோடமிவையெனவகுக்கலாமே.

## சுக்கிலவாயு.

114 உடம்பினிற்றடிப்புமுண்டாயுதரத்தினூதையுண்டாய்
இடம்படத்தாதுநட்டமெய்தியேசங்கந்தன்னில்
திடம்படத்தொழிலுமன்றிச்சுக்கிலந்தேயுமாகில்
வடம்படுகொங்கைமின்னேசுக்கிலவாயுவென்னே.

## சுரோணிதவாயு.

115 மாதர்நாட்சங்கையின்றிமற்றைநாட்கருப்பநாளில்
ஈதல்லால்நாலிலாறிலிற்றிற்றுத்துவாலைகாணும்
ஓதமாயுடம்புதன்னில்வாயுவுஞ்சேர்ந்துகொள்ளும்
சூதுலாமுலையாய்கேளாய்சுரோணிதவாயுவாமே.

## சூசிகாவாயு.

116 மங்கையர்க்குக்கருப்பமுற்றபத்தாமாதம்
வாயுவினில்வாயுவரிற்பித்தந்தோன்றித்
தங்குகர்ப்பப்பிரவேசங்கண்டாலங்கத்
தனில்வேர்வைபலமீனந்தாதுநாசம்
அங்ககம்பமயிர்க்கூச்சம்நெற்றிவேர்வை
யாயாசங்குருதிவலியநகள்வெகர்
துங்கவிழியுறங்கவொக்காக்கண்டாம்
சூசிகாவாயுவெனச்சொல்லலாமே.

### மலத்தம்பவாயு.

117 காமமாங்கலவிக்கீழ் .... .... .... ருந்தினாலும்
ஏமமாம்வழிநடந்து பசியி லூணிலாமையாலும்
சேமமாம்பாவைசெய்யுஞ்சீறியேமலத்தைக்கட்டும்
வாமமேகலையாய்கேளாய்மலத்தம்பவாயுவாமே.

### சலத்தம்பவாயு.

118 மந்தத்திற்பொசிக்கையாலுமாதர்தமூயக்கத்தாலும்
தொந்தித்துச்........சலத்தைவாயுவேசூழ்ந்து தட்டி
நொந்திற்றுச்சிறுநீர்வீழுநோவுடன்பிடித்துக்கொள்ளும்
தந்துற்றவிடையினாளேசலத்தம்பவாயுவாமே.

### உஷ்ணவாயு.

119 வயிறதுபொருமிவாடுமந்தமாம்பசியுமில்லை
துயில்வதுசுகமுமில்லைசோர்ந்துடன்முறிக்குநெட்டி
யியலிருந்தாது நட்டமெய்துநீர்சிவந்துவீழும்
மயிலியன்மானேயுஷ்ணவாயுவின்குணமிதென்னே.

### வாதவாயு.

120 மண்டியவுதரந்தன்னிலக்கினிதனைமறைத்துக்
கொண்டிடுமாகாரத்தைக்குமட்டியேயருமையாக்கும்
உண்டியும்புளித்தேக்கிட்டேயுஷ்ணமாய்மலமூந்தள்ளுந்
திண்டிறல்வாதவாயுவிதுவெனச்செப்பலாமே.

### பித்தவாயு

121 பண்டுளமலமுஞ்சிக்கிப்பித்தமூநெஞ்சிற்கட்டிக்
கொண்டுநின்றாகாரத்தைக்குமட்டியேயெடுத்துத்தட்டி
மண்டியசரீரம்வற்றிவயிற்றையும்வலிக்குமாகில்
ஒண்டொடிகேளாய்பித்தவாயுவென்றோதலாமே.

### சிலேற்பனவாயு.

122 விளங்கியவுதரந்தன்னில்விரைந்திரைந்துருட்டியேறிக்
களங்கமாய்மலம்போம்நொந்துகடுத்ததிற்சீதங்காணும்

அளங்கிளநீர்சம்பீரஞ்சொல்புளிப்புரமேயேற்கும்
உளம்பெரிதுடையீர்சேற்பவாயுவென் றுரைக்கலாமே.

நாசவாயு.

123 பசியேறுமெரிவுகாணும்பசியின் றிமந்தங்காணும்
இசைதருமந்தந்தன்னிலேற்றிடிலிதமுங்காணும்
சுசிபெறச்செறிக்கும்போது துயாமும்வலியுங்காணும்
வசைபெறுமிவைகள்நாசவாயுவின் குணங்களாமே.

அசீரணவாயு.

124 கொண்டிடும்பொசிப்பறுதகுளிர்ந்திடில்வெதும்பிக்காயும்
பண்டியின்மலம்போகாதுபசியின் றித்தண்ணீர்வாங்கும்
விண்டிடுமுடம்புசற்றுவேதனைகடுப்புமுண்டாம்
அண்டருமறியச்சொன்னேமசீரணவாயுவென்றே.

நீர்ப்பாடு.

125 மந்தமாயுதரந்தன்னைவலித்துநெஞ்செரித்துவாந்தி
சிந்தியேயுடல்குளிர்ந்துசீறியேமலங்கழிந்து
நொந்துகால்கையுளைந்துநவலநுந்தாகமுண்டாம்
இந்தநோய்விஷநீர்ப்பாடென்றியம்பினர்முனிவர்தாமே.

கோட்பாடு.

126 துன்னியவுதரநொந்துசோறுசோறுய்க்கழிந்து
மன்னியதாகந்தண்ணீர்வாங்கியேவாந்திசெய்து
பின்னுங்கால்கெண்டைபேறிப்பிதற்றியேபிரேதம்போலாய்ச்
சன்னிவாதங்கள்சேருங்கோட்பாட்டின்றனைமைதானே.

சூடாற்படுவன்.

127 மலமதுகழிந்துபின்னைவாந்தியேமிகவுமுண்டாய்ச்
சலமதுகழிந்ததண்ணீர்த்தாகமுமிகவுமுண்டாய்
மலம்நுரைபோற்கழிந்துவயிறழன்றெரிந்துநொந்து
குலவியாத்தம்விழும்சூடனிற்படுவன்றானே.

### குடர்வாதம்.

128 பேர்பெறுமூதாங்தொட்டுப்பீசமட்டாயிறங்கிச்
சோர்வுறவிதனஞ்செய்துவிதைதனைச்சுழலவாங்கும்
கார்பெறுகுழலாயிந்தக்கசடியதோர்குணமேகண்டால்
நேர்குடர்வாதமென்றுநிகழ்த்துவரான்றோர்தாமே.

### மூலவாயு.

[வெண்பா.]

129 வற்றுமலந்தீயுமந்திக்குமேல்வெளுக்குஞ்
சற்றுமிரைச்சறணியாது—முற்றுமது
மூலமாம்வாயுமுதுகுவிலாப்புறத்திற்
சாலவேநோவுதருந்தான்.

### மூலவாதவாயு.

130 கொழுவுமிடுப்புவிலாப்புறங்கள்குன்றவிழுத்துக்கடுத்துடலிற்
பழுவுமருந்துமிடுந்தோறும்படருந்திமிருங்குடைச்சலுமாம்
முழுதும்பொருமும்......விடாமுன்போணிமிரவருத்தமுமாம்
எழுதும்வதனமடமாதேமூலவாதவாயுவிதே.

(கிஷாயம்.)

131 *நெருஞ்சிவீழியிலையுடனேரோர்பிரமிகடுக்காயு
மருந்துங்கடுகுரோகணியுமஞ்சுங்கூட்டிவடியுழக்காய்
விருப்பேரண்டநெய்சற்றுவிட்டேயளாவிக்கொள்வார்கட்
கரும்புமூலையாய்க்கொழுகலிவையமருமலமுமழிந்திடுமே.

132 *அழிந்திடாவசப்புசுக்கொடாணமஞ்சளாமமூங்
தெளிந்ததேவதாரமுஞ்செப்பிரண்டுகாசெடை
பொழிந்திரண்டுநாழிநீருழக்கதாய்ப்பொசித்திடில்
ஒழிந்திடுப்புவாத................டில்வாய்வுளைச்சலோடுமே.

---

* 131, 132-ம் பாட்டுக்கள் மற்றக்கவிகள் கூறும் குணம் முதலியவற்றைக் கூறாமல் மருந்து கூறுவது பொருத்தமாயில்லை.

## அண்டவாதவாயு.

133 கொண்டது குடரிற்றங்கிக்குறைந்தொருவிதையுந்தோன்றி
மண்டியேவலித்து வீங்கிமறுவிதைதனிலுந்தோன்றும்
பண்டியிலொத்துவாங்கும்பகர்ந்திடுமண்டவாதம்
தண்டமிழ்முனிவன்முன்புசாற்றியகுணமிதாமே.

## அண்டசூலை.

(வெண்பா.)

134 வீங்கித்தடித்துவிதனமுற்றுப்பீசமொரு
பாங்கிலிருபுறமும்பற்றியே—தீங்குதாக்
கண்டித்தனத்துங்கலந்துபொருமுமெனில்
அண்டத்திற்சூலையெனலாம்.

## கழல்வாயு.

135 குடலிடைகூப்பிட்டேறங்குமிறிடும்விதையிற்சுற்று
மிடைபடவிதனஞ்செய்யுமேனியுமெலிந்துநோவாம்
இடுகுறிகுணங்கள்கண்டாற்கழல்வாயுவென்னலாகும்
குடமுனியருளிச்செய்தநூன்முறைகுறித்துக்காணே.

## கூர்மன்.

136 வஞ்சியரோகூர்மனெனும்வாய ...........
மதற்குவனசமுகைபோலுண்டாகி
மிஞ்சியதுகண்காதுவராளுமூக்கு
மெய்ஞ்ருபசொரூபமதாய்வெம்பலுண்டாய்
நெஞ்சீரலதிற்கடிக்குஞ்சுருக்கிட்டேதா
னிற்பாத்திற்றடித்துமூக்குமலங்கழிக்கும்
வெஞ்சினங்கொண்டேவாலாவிருத்திக்குத்தும்
விதியறிந்தேயவுடதத்தைவினவிச்செய்யே.

## அதிசாரவாயு.

137 உடர்வாண்டிரைந்துநொந்துகுறுக்கினில்விலாவிற்குத்தி
யுடற்சலிகெட்டுக்கைகாலோய்ந்துமேற்புளித்தேக்காகும்

பிடித்தன்னம்பெருகவேண்டாபெற்றசோறறுமனின்றே
அடிக்கடிவயிறுங்காணுமதிசாரவாயுவாமே.

மூலவாயு.

138 மூலவாயுகோபித்தான் மூடுகியகழிச்சலுண்டாம்
மேலதுநோருமன்னம்வேண்டிடாதருவருக்கும்
காலொடுவயிறுப்வீங்கிக்காமொடுகாலுமோய்ந்தாற்
கோலவார்குழலினளேமரணமென்றறிந்துகொள்ளே.

வத்திரதேசி.

139 மானநீருதாந்தன்னில்வருந்தவேதனைகள்செய்யும்
போனகஞ்செரித்தறுதுசெரித்திடும்போதுதன்னில்
ஊனுறுமுதாத்தூடேயுளேந்திடுநாபிதன்னில்
வானுறவலித்துவிம்மும்வத்திரதேசியென்றே.

முண்டகம்.

140 உற்றதுமூலேமார்பின்கீழுன்னிநாலங்குலத்தில்
மற்றுமோர்பழுவூடோடிமருண்டுறக்கனத்துவிம்மிப்
பற்றுறவலித்துப்பின்னைப்பையவூன்கெடுத்துச்சோர்வில்
முற்றுறுமிதனைநீயுமுண்டகமென்றுசெப்பே.

குன்மசூலை.

141 மேல்வயிறதனில்வந்துமிடைபடவலித்தேசுற்றும்
சாலவேவாய்நீரூறித்தருகிடாதேப்பமுண்டாம்
சீலமாங்குளிரேகண்டுசிறகவேவெதுப்புமென்னில்
ஏலவார்குழலாய்குன்மசூலையென்றியம்பலாமே.

சுரசூலை.

142 பக்கமாஞ்சூலைதோன்றிப்பலபடவுதாந்தன்னி
லொக்கவேசுரமுந்தோன்றியுளேயுமிக்குளதேயென்னி
... ... ... ... ... ... ...
தக்கதோர்சுரத்தின்சூலைதானெனப்பேசலாமே.

143 சுரமுடனுதரந்தன்னிற்றோன்றிடுந்திரட்சியாக
உரமிகப்புரண்டுவாய்நீரூறிநெஞ்செரித்துக்காட்டும்
வரமதுபோலேமண்ணமறந்திடுங்குணங்கள்கண்டாற்
சுரமுறுசூரையென்றுசொல்லுவர்பெரியோர்தாமே.

144 உண்டியைமறுத்துவாய்நீரூறிநெஞ்செரித்துப்பற்றி
மண்டியேசுரத்தொடொக்கவயிற்றினிற்றிரண்டுதோன்றுந்
தண்டியேதிரண்டவெப்பந்தணியவேயமைந்தொதுங்கும்
பண்டையவாயுர்வேதம்பகர்சுரசூரையாமே.

கற்சூரை.

145 உற்றதோர்கீழ்வயிற்றிலுருண்டுதான்வளையம்போலப்
பற்றியேவலித்துப்பின்னும்பரந்துதான்பொருமுமாகில்
.... .... ... ... ... ... ...
கற்பெருஞ்சூரையென்றுகருதிநீயறிந்துகொள்ளே.

*146 .... .... .... .... .... .... ....
.... .... .... .... .... .... ....
.... .... .... .... .... .... ....
.... .... .... .... .... .... ....

பக்கசூரை.

147 வந்துபொருமுமண்டத்துள்வலித்துமிகவேசுரந்தோன்றி
நொந்தேயுடம்புபுண்போலநோகுமுடனேதலைவலியாம்
இந்தவடைவேதோன்றுமெனிலிதுவேபக்கசூரைசெயும்
அந்தக்குணங்களெனமுன்னோராய்ந்துரைத்தாராயிழையே.

நாவிசூரை.

148 உந்தியிற்சுழியிற்சுற்றியுருண்டெழும்வளையம்போல
வந்துநொந்துதாம்விம்மிவெடித்திடுஞ்சலமுமாறு
மூந்தவேகனப்பதாகிப்பொருமல்மூர்ச்சையுமேயாகும்
இந்தவாறிருக்கில்நாவிசூரையென்றியம்பலாமே,

* 146-ம் பாட்டு மிகவும் பிழைபட்டிருத்தலால் இங்கே சேர்க்கப்படவில்லை, எழுதிக்கொள்ளும்படி இடம் விடப்பட்டுளது.

149 எலவார்குழலினாளேயியம்பியவுதரநோயிற்
சூலையேவலியதாகுந்தோன்றிடுந்தலங்களோடு
மேலுறுபேர்குணங்கண்மிக்கதோர்குறிகள்யாவும்
நூலுள்ளோருரைத்தசெய்திநவலுவோங்குறித்துக்கொள்ளே.

*150—162 ... .... ... ... .... ...
.... .... ... ... ... ....
... .... .... .... .... ....
.... .... .... .... .... ....

## கருப்பரோகம்

163 வஞ்சிக்கொடியாருதரமதின்மருவுங்கெர்ப்பரோகமிது
மிஞ்சுசுரஞ்சுரோணிதஞ்சூலைமிகுத்தவாயுக்கிருமியொடு
செஞ்சொன்மடவாய்விப்புருதிசேரும்புணர்ச்சிவஞ்சனையோ
டெஞ்சுமருத்தீடொன்பதனுலெழுமென்றுன்றேரியம்பினரே.

## கேர்ப்பசுரோணிதம்

164 திரண்டுபுரண்டுகீழ்வயிற்றிற்றினமேமாதவிடாய்காணும்
மருண்டுகுருதிமிகுத்துவரும்வாய்நீர்பெருத்துமயக்கிவரு
மருண்டுசிலநாள்விட்டுநிற்குமழிக்குங்கருவையிழிப்பிக்கு
முருண்டாரத்தரோகமெனவுறுதியிதுகொண்டுரையீரே.

## கேர்ப்பசுரம்.

165 நீருஞ்சுரமாயுடம்புலருநீருஞ்சிவக்குமடிவயிற்றி
னூறுமிகவேகறைபடும்போதுடனேநீருமோடுவாகும்
சேறுங்கருவைபழிப்பிக்குந்தினமேகாந்தல்மிகும்பொருமும்
கூறுஞ்சோனையிலதாகுங்கொடியசுரத்தின்குணமிதுவே.

## கேர்ப்பசூலை,

166 பிள்ளைபெற்றவுதரமதிற்பெருகுஞ்சோனைபோகாதா
லுள்ளேதிரண்டுவிலாமுடிபோலூதம்வாயுச்சூலையதாய்
வெள்ளைவீழுமோடுப்பட்டுமிகவுமழிக்குங்கெர்ப்பமதைத்
தள்ளுமுடம்புதான்விம்முஞ்சாற்றுங்குணத்தைத்தானறியே.

* 150 முதல் 162-ம் பாட்டு முடிய மூலப்பிரதியில் இல்லை,

## கெர்ப்பவாயு.

167 பொருமிரத்தந்தனைமறுத்துப்போதமிகவேவலியுண்டாம்
குருதிகழியில்வலிதீருங்கொள்ளுங்கருப்பந்தனையழிக்கும்
வருடியிடுப்புக்கடுத்துளையுமலத்தைமிகவும்விறுவிறுக்கும்
பெருகும்வாயுத்திரட்சியெனப்பேசுங்கெர்ப்பரோகமிதே.

## கெர்ப்பக்கிருமி.

168 பொருமித்திரண்டுகீழ்வயிற்றிற்புண்பட்டிருந்துசீக்கொள்ளும்
வருதற்கரியவெள்ளையுண்டாய்வலியுஞ்செவ்வேமாறல்
உருமிப்பிழிதல்போல்மேனியுலர்ந்துநியங்குமொடுவுண்டாம்
கிருமிதோஷமென்றுரைக்குங்கெர்ப்பரோகக்குணமாமே,

## கெர்ப்பவிப்புருதி.

169 அடிவயிறதைத்துவிம்மியழுந்திடும்புண்போல்நோவாய்த்
தடைபடவிரத்தநின்றுசற்றுச்சற்றாகவீழும்
இடருறவலிக்குமாதவிடாய்நாளிலிரத்தமின்று
மிடைபடுங்குணமேகெர்ப்பவிப்புருதியென்னலாமே.

## கெர்ப்பப்புணர்ச்சி.

170 இந்திரியம்நீரேபோலிடைவிடாதிறைந்துவீழும்
முந்தவேதங்குங்கெர்ப்பமிடைபடுமுதிரமாகச்
சிந்திடேயோடும்வாயுத்திரட்சியாய்ச்செறுத்துவிம்மும்
புந்தியைமயக்குங்கெர்ப்பப்புணர்ச்சியின்புதுமைதானே.

## (கெர்ப்ப)வஞ்சனை.

171 பஞ்செனவெளுக்குமேனிபருந்திடுந்தலையில்நோபம்
நெஞ்சுறவெரித்துவாய்நீருறியேநிதம்பக்காந்தும்
மிஞ்சவேசோரைசாயும்வேர்வையுமயக்கமுண்டாம்
வஞ்சனைக்குறையாங்கெர்ப்பம்வராத்திடுங்குணங்கடானே,

## மருந்தீடு.

172 அருந்திடும்பொசிப்புக்காணுதறவுலர்ந்தத்தியாகும்
வருந்தியேநெஞ்சலர்ந்துவரட்சியாயிருமலுண்டாம்
பொருந்திடுங்கருப்பந்தீப்போற்பொங்கியேயுதிரம்போகா
மருந்தினீடதனால்வந்தகெர்ப்பநோய்வகையிதென்னே.

## கெர்ப்பரோகங்களிற் றீர்வனவும் தீராதனவும்.

173 இரத்தசுரத்தோடடனேவுமியல்வதாகுஞ்சூரையினி
லூரத்தவாயுக்கிருமியோடுரைக்குங்கெர்ப்பவிப்புருதி
வருத்துமம்புணர்ச்சிவஞ்சனையுமருந்தினீடுமென்றிவற்றிற்
றிருத்தமாகமுன்னான்குந்தீராதைந்துந்தீருமன்றே.

## பிள்ளையிலாமைக் கேது.

174 தாய்தந்தைசெயலினாலுந்தானவாய்ப்புழுவினாலும்
வாயுவின்குணத்தினாலும்வஞ்சதைவளர்ச்சியாலும்
நோயதின்குணங்களாலுநொய்துகால்விலக்கலாலும்
பேய்களின்குணத்தினாலும்பிள்ளையில்லாதுபோமே.

## கிராணிவகை.

சங்கரக்கிராணி, சலக்கிராணி, கபக்கிராணி, மூலக்கிராணி, வாயுக்கிராணி, ரத்தக்கிராணி, பித்தக்கிராணி எனக் கிராணி எ. இவற்றுள் அசாத்தியம் ச. அவை:—சங்கரக்கிராணி, சலக்கிராணி, கபக்கிராணி, மூலக்கிராணி என்பவை. இந்த நான்கும் தீரா. சாத்தியம் ௩. அவை:—வாயுக்கிராணி பித்தக்கிராணி, ரத்தக்கிராணி என்பன. இந்த மூன்றும் தீரும்.

## அசாத்தியம் ச-ல் சங்கரக்கிராணி.

175 அங்கமும்வெளுப்பதாகியடிவயிறதைத்துக்காட்டி
மங்கியவுதரந்தன்னில்வாயுவுஞ்சலமுங்கோத்துப்
பொங்குசோறறுமனின்றுபுளித்தேக்காய்நெஞ்செரித்துத்
தங்குசோறறுமல்வீழுஞ்சங்கரக்கிராணியாமே.

---

[ஏட்டுப்பிரதியில் இதற்குமேல் இல்லை.]

ஸ்ரீ:

# ஆரியன் வாகடவெண்பா.

[கஉசா-ம்பக்கத்தொடர்ச்சி.]

### பெருவயிற்றுக்கு.

வருந்தும் பெருவயிற்றில் மானே சிவதை
திருந்துங்கள் ளிப்பாலிற் சேர்த்தே — அருந்தவே
நாடுவிட்டுக் காடுபுகும் நன்மையுட னேயிதனைப்
பாடுபட்டுத் தானுமே பண்ணு.

### குன்மத்துக்கு.

விட்டுவெள்ளாட் டின்பாலை மின்னேதேங் காய்ப்பாலில்
இட்டமுடன் திப்பிலியு மிந்துப்பும் — தட்டியிட்டுப்
பாகாகக் காய்ச்சிப் பதமாங் கடுகருந்தப்
போகுமே குன்மம் புகல்.

செப்புபெருந் தும்பையதிற் சேருங் கொழுந்துசுக்கோ
டொப்புவெள்வெங் காயமிள கோமமுடன் — தப்பா
வசம்புமே கூட்டி வருமெருமை மோரில்
பசப்பவே காய்ச்சியுண்டு பார்.

### குன்மம் பீலிகைக்கு.

அரியபசு வின்பாலு மாந்திருகு கள்ளி
யுரியபா லுங்காய்ச்சி யொன்றாய் — வருதயிரில்
மத்திட் டுறக்கடைந்து வந்தவெண்ணெய் கொண்டுவிட
உற்றகுன்மம் பீலிகையோ டும்.

### சகலகுன்மத்துக்கும்

செல்லுமே திப்பிலியுஞ் சித்திரமூலஞ் சுக்குத் தூதுவேளைவேர்
வல்லசலங் கொம்புடனே வட்டில்வேர் — நல்ல
தலைசுருளி மூக்கறையின் வேரோடு............
வலைவிழியாய் சேவகன்வேர் வாங்கு.

வாங்குந் திருகுகள்ளி மானே யிவைபத்தும்
தீங்கில்லா மற்பொடியாய்ச் சேகரித்துப் — பாங்காகத்
தேனிற் குழைத்ததனைத் தின்ன வெருகடியாய்த்
தானே சருவகுன்மஞ் சாய்ந்து.

### மேகத்துக்கு

பாரீரே மேகம்வந்தாற் பண்பார்பே யன்பழத்தைச்
சீரியநெய் சர்க்கரையும் சீரகமும்—நேர்பெறச்சேர்த்
துண்டவுட னுள்மேக முட்காய்ச்ச லுள்ளவெல்லாந்
தெண்டனிட்டுப் போகுந் தினம்.

### மந்தத்துக்கு.

நன்றாக வேற்கொம்பு நற்சா ரடைவேரு
மொன்றாய்க் கிஷாயஞ்செய் துண்டிடவே—யன்றேதான்
ஓடியே மந்தம் ஒழியுமே நாடுவிட்டு
வாடுமே கெட்டு மனம்.

### வாயு, வெட்டு, கிரந்திக்கு.

உண்ணு மிலவங்க மோ துபலை முக்கடுகு
தின்னேலம் நாகப்பூச் சேர்ந்தமுத்தம்—பண்ணுபொடி
பாலிற் சிவதைசுத்தி பண்ணியே கொண்டபொடி
நாலு மூடன்கலப்பாய் நன்று.

நன்றுபொடி முக்கழஞ்சு நாறுந்தேன் சர்க்கரையில்
தின்றுவிடும் போது சிதறியே—பொன்றுமே
மீளாம லோடு மிகுந்தபித்த வாயுவெப்பு
கிழாங் கிரந்தியுமே கெட்டு.

### காமாலை, பாண்டு, பித்தம், கிராணி, மூலத்துக்கு.

காமாலை போங்கடுக்காய் காய்ச்சினநீர் நெய்விட்டு
.... .... விட்டுப் பேர்த்தரைத்து —வேமாகில்
பக்குவம்பார்த் தேவடித்துண் பாண்டுபித்தங் கிராணியறும்
திக்கெனப்போம் மூலம் திசை.

### பிள்ளைபெற்றவயிறு பழுத்துச் சோரை கண்டால்.

ஓடும்பிள் ளைப்பேற் றுடன்வயிறு தான்பழுத்து
நாடுகின்ற சோரையுமே நண்ணினல்—போடுசுக்கு
வெள்வெங்கா யம்மிளகு வேலிப் பருத்தியிலை
கொள்மூன்று நாட்குடிநீர் கொள்.

### பேனாய்க்கடிக்கு.

எகுமெருக் கம்வே.... .... .... ....
லாகும்புன் னைக்கா யதன்பருப்பும்—வாகா

யரைத்த மருந்தை யவற்பிசிறி யுண்டால்
வருத்தும்பே நாய்க்கடிக்கு மாற்று.

பயித்தியத்துக்கு.

காணு மிளகுநெல்லி கானில்வள ருங்கொடிப்பை
பூணுமந்தச் சீரகமும் போதவே—வாணுதலே
வெண்ணைமுலைப் பாலரைத்து மேவுதலை யப்பிவை
யுண்ணுமருந் தின்ன ரூணர்.

உரைத்ததே சிப்பழத்தி லூறசெம்பு போட்டுக்
கருத்துடனே யுண்ணக் கலங்கும்—வருத்தமாய்
மீறும் பயித்தியமும் மீறுமற் றூனேடி
யாறுமென வோது மதை.

அரையாப்புக்கு.

சொல்லுங் கொடுவேலித் துய்யவேர் சர்க்கரையும்
வல்லபெருங் காயம் வசம்புடனே—நல்லதொரு
வெள்வெங்கா யந்துருசு வேண்டுமெண்ணை தன்னிலே
கொள்ளரையாப் போடுமிதைக் கூறு.

பித்தம் பிரமேகத்துக்கு.

மாறு முருங்கையின்வேர் வண்மையுள்ள கற்றாழஞ்
சோறுஞ் சரியாகச் சோதித்தே—கூறுடனே
யுண்ணவே பித்தமது வோடும் பிரமேகம்
விண்ணிலே பாயுமுடல் விட்டு.

பித்தத்துக்கு.

பேசரிய நெற்பொரியும் போரன கூவிளையும்
பூசுபற்ப டாகமும் பூசணிப்பூ—மாசில்லா
நாட்டுச் சிறுபயறும் நன்மையுடன் காய்ச்சியுண்ண
வாட்டமில்லை பித்தமா யும்.

நீர்ச்செறுப்புக்கு.

கண்டுகோ ழிக்காரம் .... .... சோகிசுட்டு
விண்டாவி னெய்கூட்டி வேட்டில்வைத்துக்—கொண்டுதா
ஞள்ளே செலுத்திவிட வோடுமதி மாங்கிசம்
தள்ளமா நீர்ச்செறுப்புக் கள்.

பல சுரம் சன்னிகளுக்கு.

ஓடுநெத்தைச் சூரி யுறுவே ருடைவேரும்
நாடுவே லிப்பருத்தி நல்லவேர்—கூடுமொரு
தூது வளைவேர் அலங்குவிளப் பாகலின்வேர்
ஏதமில்வே லம்பட்டை யே.

ஏறுவேப் பம்பட்டை யேற்ற கடுக்காய் மிளகு
நாறும்வெள் ளுள்ளியுட னடியே—கூறும்
வசம்புடனே திப்பிலியும் வந்தகுப்பை மேனி
கசங்காத துத்தியின்வேர் காண்.

காணு மருந்தெல்லாங் கந்தமதி லேயரைத்துப்
பூணும்நல் லெண்ணெ தனிற் பூண்டெரித்துப்—பேணியே
உள்ளருந்தி மேற்பூச வோடும் பலசுரமுங்
கள்ளமுள்ள சன்னியுமெய் காண்.

நீரடைப்புக்கு.

கூட மரிச்சோறுங் கூண்டகருஞ் சீரகமும்
நீடுபஞ்ச தாரையுட னேயுண்ணப்—பாடுசெயுங்
கல்லடைப்பு மாயுங் கடியபொரி காரத்தை
யொல்லுமிள வெந்நீரி லுண்.

அருந்துசிறு பூளையின்வே ரானபனை வெல்லம்
திருந்தவே பாலதனிற் சேர்த்து—வருந்தியே
நான்குநாள் கொண்டுவிட நாடாது நீரடைப்புப்
பான்மொழியா யாகுமிது பார்.

உதரவாயுவுக்கு.

தானேவெள் ளுள்ளி தனிலுப்பைத் தான்பொதிந்து
வேனலெனு மக்கினியில் வேகவைத்தே—ஆனதனை
இங்குவுடன் கூட்டி யிளவெந்நீ ரிற்கொள்ள
மங்குதா வாயுப்போ மால்.

இருமல் ஈளைக்கு.

காணீரா டாதோடை கண்டங்காரி துளசி
.... .... டிப்பிலியுந் தூளிட்டுண்—நாணியிதில்
கொக்குக்கொக் கென்னுங் குலைப்பிரும லீளையிவை
பொக்குப்போக் கென்றோடிப் போம்.

உதவிப்பத்திராதிபர்.